பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 28 புதன்கிழமை (13-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:258

### உரிமைகள் மறுக்கப்படும் ஈழத் தமிழர்களுக்காக

# மண்மீட்க இளையவர்கள் மரணிக்கும்போது நான் சிறை சென்றமை சிறிய தியாகம்தான்!

### பொடா நீதிமன்றத்தில் பழ.நெடுமாறன் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஓராண்டுக்கு முன் பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் சுப.வீரபாண்டியன் உட்பட 5 பேர் மீதும் பொடா சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டன.

பழ.நெடுமாறன் (வயது-69), சுப.வீரபாண்டியன் (வயது-51), புதுக்கோட்டை பாவாணன் (வயது-51), டாக்டர் தாயப்பன் (வயது-31), 'தமிழ் முழக்கம்' பதிப்பாளர் சாகுல் ஹமீத் (வயது-42) ஆகியோர் மீது பொடா சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன.

பொடா நீதிமன்ற சிறப்பு நீதிபதி எல்.ராஜேந்திரன் முன்னிலையில் இந்தக் குற்றச் சாட்டுகளை மறுத்து பழ.நெடுமாறன் அளித்த வாக்குமூலத்தின் விவரம் வருமாறு:-


நான் ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமையைத்தான் செய்தேன். அதற்காக சிறை செல்லும் வாய்ப்பு கிடைத்தமை குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகலாந்து, மிசோராம் ஆகியவற்றில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களுடன் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி ஆகியோர் ஜப்பானிலும், டில்லியிலும் பேச்சு நடத்தினார்கள். இப்பேச்சுக்கள் அதிகாரிகள் மூலம் இன்னமும் தொடர்கின்றன.

தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றம் என்றால், பிரதமரும், துணைப்பிரதமரும் செய்த செயலுக்கு பெயர் என்ன?

ஈழத் தமிழர்கள் எம்மோடு இரத்த உறவு கொண்டவர்கள். சிங்களவர்களின் இரத்தவெறி பிடித்த இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு அவர்கள் துயரக்குரல் எழுப்பும் (16ஆம் பக்கம் பார்க்க)





நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் நேற்று மஞ்சத்தில் சுவாமி வீதி வலம் வரும் காட்சி (உள்படம் மஞ்சத்தில் எழுந்தருளிய முத்துக் குமாரசுவாமி)

# கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பை ஏற்க வலியுறுத்துவார் சொல்ஹெய்ம்

### இன்று புலிகளைச் சந்திக்கும் போது

கொழும்பு,ஓகஸ்ட்13

**இலங்கைக்கு வந்துள்ள நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சி செல்கிறார். அங்கு விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார். திருகோணமலை 'குரங்கு பாஞ்சான்' முகாம் தொடர்பாக கண்காணிப்புக்குழு வழங்கிய தீர்ப்பை ஏற்று அனுசரித்து நடக்கும்படி புலிகளின் தலைவர்களை அவர் நேரில் வற்புறுத்துவார் எனத் தெரிகின்றது.**

எனினும், குரங்குபாஞ்சான் பகுதியில் புலிகளின் முகாம் அமைந்திருப்பது தொடர்பாக அரசுத் தரப்பினாலும், புலிகள் தரப்பினாலும் தெரிவிக்கப்படும் நியாயங்கள், எதிர் நியாயங்கள் குறித்து அவர் அதிக கவனம் செலுத்தமாட்டார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு சீனா உடனடி உதவியாக 76 கோடி ரூபாவை வழங்கத் தீர்மானம்!

### புதிய ஒப்பந்தமொன்றில் கைபெழுத்திடவும் இணக்கம்

(பெய்ஜிங்கிலிருந்து ஞா.குகநாதன்)

பெய்ஜிங், ஓக.13

இலங்கைக்கு உடனடி உதவியாக 76 கோடி ரூபாவை சீன அரசு வழங்கவிருக்கின்றது. இரு நாட்டுப் பிரதமர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் இந்த உதவிகள் குறித்து தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதார மற்றும் தொழில்நுட்பத்துறையை அபிவிருத்தி செய்யும் திட்டங்களுக்கு 40 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்க சீனா முன்வந்திருக்கிறது. விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இலகு கடனாக 36 கோடி ரூபா வழங்கப்படும்.

இவ்விரு உதவிகளும் உடனடியாக இலங்கைக்கு கிடைக்கவிருப்பதாக பிரதமரின் பிரதிநிதிகள் கூறினர்.

அதேவேளை, இலங்கையும் சீனாவும் வர்த்தக மற்றும் தொழில்நுட்பத் துறையில் உறவுகளை மேம்படுத்துவதற்காக புதிய ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடவுள்ளன.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீனப் பிரதமர் வென் ஜிவாபாவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் இந்த ஒப்பந்தம் குறித்து இணக்கம் ஏற்பட்டுள்ளது.

1952 ஆம் ஆண்டு இரு நாடுகளுக் (16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு,ஓக.13

புலிகள் எனக்கு எதிரானவர்கள் அல்லர். காணிப் பங்கீடு விடயத்தில் தமது முழு ஆதரவையும் வழங்க அவர்கள் உறுதி அளித்துள்ளனர். அண்மையில், திருகோணமலையில் நடைபெற்ற காணிக் கச்சேரியின் போது புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்களுள் ஒருவரான திலக் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

- இவ்வாறு காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன கூறினார்.

நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே இப்படிக் கூறினார்.

அமைச்சரின் யாழ். விஜயம் ஏன் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப் (16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். இந்துவில் மொத்தம் 13 பேருக்கு 3'ஏ' பெறுபேறு

கடந்த சனிக்கிழமை வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி யாழ்.இந்துக் கல்லூரியில் மொத்தம் 13பேருக்கு மூன்று பாடங்களிலும் அதிதிறமைச் சித்தியான 'ஏ' பெறுபேறு கிடைத்துள்ளது.

நேற்றைய உதயனில் யாழ்.இந்துவில் 9பேருக்கு 3'ஏ'க்கள் என்று செய்தி வெளியாகி இருந்தது.

எனினும்,உயிரியல் விஞ்ஞானப் பாடத்தில் மேலும், நால்வருக்கு 3'ஏ' பெறுபேறு கிடைத்துள்ளது. மொத்தத்தில் இந்தப்பிரிவில் 5பேருக்கு 3'ஏ' பெறுபேறு கிடைத்துள்ளது.

### குப்பைக்குத் தீ மூட்ட கிரனேட் வெடித்தது!

கொழும்புத்துறை,ஓக.13

கொழும்புத்துறை, 5ஆம் குறுக்கு வீதியில் நேற்றுமுன்தினம் குப்பை கொளுத்திய வேளை அதற்குள் இருந்த கிரனேட் ஒன்று வெடித்துள்ளது.

அருகில் இருந்த குடிசைக்குள் பலர் இருந்தபோதும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு.மாவட்ட முஸ்லிம் பகுதிகளில் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிப்பு


### தமிழ்ப் பகுதிகளில் வழமைநிலை

ஆரையம்பதி,ஓக.13

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி போன்ற பகுதிகளில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

ஏறாவூரில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட 13 ஆவது ஆண்டை நினைவு கூரும் முகமாகவே துக்க தினம் அனுஷ்டிக்கப்படுவதாக ஏறாவூர் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனச் செயலாளர் முகைதீன் பாவா தெரிவித் (16ஆம் பக்கம் பார்க்க)





நல்லூர் ஸ்ரீ பால கதிர்காமம் ஆலய வருடாந்த ஆடிவேல் ஊர்வலம் யாழ்.நகர வீதியூடாக வந்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்:அலுவலக படப்பிடிப்பாளர்)

# கல்விசாரா ஊழியர் வேலைநிறுத்தத்தால் பல்கலைக்கழகங்களின் பணிகள் பாதிப்பு

செங்கடகல,ஓக.13

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்றுமுதல் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தத்தினால் பல்கலைக்கழகங்களின் பெரும்பாலான பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பதிவாளர்கள் போன்றோரைத் தவிர ஏனைய கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உட்பட 21 கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

வடக்கு - கிழக்கு உட்பட அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது.

இக்கோரிக்கைகளில் பல நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் எஞ்சிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சட்டச்சிக்கல்கள் இருப்பதாகவும் மூன்றாம்நிலைக் கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பேராதனை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று கலஹா சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினார்கள்.

இதேவேளை, இந்த வேலைநிறுத்தத்தில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்று யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சுமார் 500 பேர் பல்கலைக்கழக வளாகத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

அத்தியாவசியத் தேவைகளான நீர் வழங்கல், பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றின் ஊழியர் தவிர்ந்த ஏனையோர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி)

## கதிர்காமத் தீர்த்தம்

கதிர்காமத் தீர்த்தம் நேற்று நடைபெறும் என்று ஆலயத்தில் ஒலிபெருககிகள் மூலம் அறிவிக்கப்பட்ட போதும் கடைசியில் அந்த முடிவு மாற்றப்பட்டது.

இன்றே மாணிக்ககங்கையில் கதிர்காமக்கந்தன் தீர்த்தம் நடைபெறுகிறது. நேற்று மகாபெரஹரா நடந்தது. கதிர்காமத்தில் இம்முறை பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருக்கிறார்கள். தெய்வானை அம்மன் ஆலயம், இந்து விடுதி, கிரிவிகாரை முதலான நாலைந்து இடங்களில் அடியார்களுக்குத் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

இன்று புதன்கிழமை காலை 8.00 மணிதொடக்கம் திருநெல்வேலி வடக்கு, பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, முருகன் வீதி, கலாசாலை வீதி, பாற்பண்ணை ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சு ஊட்டி அழிக்கப்படவுள்ளன. ஆகவே, வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு நல்லூா பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

☆ ☆ ☆

தென்மராட்சி,ஓக.13

சரசாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பகுதிக்குட்பட்ட மீசாலை வடக்கு, வேம்பிராய், இராமாவில் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் இன்று புதன்கிழமை நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

இப்பகுதிகளில் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு பொது சுகாதாரப் பரிசோதகர் என்.சிவனேசகுமார் அறிவித்துள்ளார். (ஒ-117)

# உணவுச்சாலைகள் உரிமையாளர் கொம்பனித்தெருவில் குத்திக்கொலை!

கொழும்பு,ஓக.13

பல உணவுச்சாலைகளின் உரிமையாளரான நானா, கொம்பனித்தெருவில் உள்ள அவரது வீட்டில் வைத்துக குத்திக்கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை கொம்பனித்தெரு, ஜாவா வீதியில் இடம்பெற்றுள்ளது. காலிமுகத்திடலில் பல இரவு உணவு விடுதிகளை நடத்திவரும் நானா, அவரது ஊழியர் ஒருவரினால் குத்திக் கொலை செய்யப்பட்ட பின் அவரது வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நானாவின் கொலைக்கு உண்மையான காரணம் என்ன என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. கொடுக்கல் வாங்கல் இதற்குக் காரணமாகவிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கொம்பனித்தெரு பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசின் சமாதான முயற்சிகளை உன்னிப்பாக அவதானிக்கின்றோம்

## பிரதமர் ரணிலுடனான சந்திப்பில் சீனப் பிரதமர்

பெய்ஜிங்,ஓக.13

இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம். சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் என நம்புகின்றோம் என்று சீனப் பிரதமர் வென் ஜிவாபா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த இலங்கைப் பிரதமர் ரணில் விகரமசிங்கவிடமே அவர் இதைத் தெரிவித்தார்.

கிரேட் வோல் மண்டபத்தில் இச் சந்திப்பு ஒரு மணிநேரம் நீடித்தது.

சமாதான முயற்சிகளில் அரசு அடைந்துள்ள முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலப் பேச்சுக்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனப் பிரதமரிடம் எடுத்துக்கூறினார்.

இதற்குப் பதில் அளித்து உரையாற்றிய சீனப் பிரதமர்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, நிலையான சமாதானச் சூழல் ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. பிரதமரின் சமாதான முயற்சிக்கு சீனாவின் முழு ஆதரவு இருக்கும் - என்றார்.

(ஒ)

# வவுனியாவில் இரண்டு திரையரங்குகளுக்குச் சீல்!

வவுனியா நகரில் இயங்கி வந்த இரண்டு திரையரங்குகள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் திரைப்பட வெளியீட்டுப் பிரிவின் பொறுப்பாளர் ராதா இதற்கான உத்தரவை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அரசியல் பணிக்காக வவுனியாவுக்கு வந்த பின்னர் வயது வந்தவர்களுக்கான திரைப்படங்கள் திரையிடப்படுவதை தடை செய்திருந்தனர். ஆயினும், இந்த இரண்டு திரையரங்குகளிலும் வயது வந்தவர்களுக்கான படங்கள் திரையிடப்பட்டு வந்தன.

இது தொடர்பாக திரையரங்கு நடத்துநர்களிடம் கேட்டபோது, திரைப்படக கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்படும் திரைப்படங்களையே தாம் திரையிட்டதாகக் கூறினர். (ஒ)

# மடுமாதா திருச்சொரூபம் இன்று வவுனியாவை அடையும்

கொழும்பு பாத்திமா ஆலயத்திலிருந்து கடந்த எட்டாம் திகதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட மடுமாதாவின் திருச்சொரூபம் இன்று வவுனியாவைச் சென்றடையும்.

வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் மடுமாதாவை வரவேற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளைக் காலை வவுனியாவில் இருந்து புறப்படும் திருச்சொரூப பவனி பிரமனாலங்குளத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தைச் சென்றடையும் அங்கு மடுமாதாவின் திருசசொரூபம் ஸ்தாபிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ஒ-9-12)

# பாடசாலைகளிலிருந்து கிடைத்த ஜி.சீ.ஈ உயர்தரப் பெறுபேறுகள்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் வருமாறு:-

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் வர்த்தகப் பிரிவில் மேரி வத்சலா இம்மானுவேல் என்ற மாணவியும் கலைப்பிரிவில் தர்மினி அரசநாயகம் என்ற மாணவியும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். விஞ்ஞானப்பிரிவில் ஒரு மாணவி 2ஏசி சித்தியும் கணிதப்பிரிவில் ஒரு மாணவி 3பி சித்தியும் பெற்றுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரியிலிருந்து தோற்றியவர்களில் வர்த்தகப் பிரிவில கனகலிங்கம் தர்மித், பிரான்சிஸ் சேவியர் பிரதீப் ஆகிய இரு மாணவர்கள் 2ஏபி சித்தி பெற்றுள்ளனர். கலைப் பிரிவில் ஒரு மாணவன் 2ஏசி சித்தியும், விஞ்ஞானப்பிரிவில் ஒரு மாணவன ஏபிசி சித்தியும், கணிதப்பிரிவில் ஒரு மாணவன் ஏ2சி சித்தியும் பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து தோற்றியவர்களில் கணிதப் பிரிவில் பா.மோகன்ராஜ் என்ற மாணவனும் வர்த்தகப் பிரிவில் நா.கஜேந்திரா, சி.பிரதீபன், சு.ரஜீபன், சி.சஜிதா ஆகிய நால்வருமாக மொத்தம் ஐந்து பேர் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். விஞ்ஞானப்பிரிவில் மூவர் ஏ2பி சித்தியும், கலைப்பிரிவில் ஒருவர் ஏ2பி சித்தியும் பெற்றுள்ளனர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து தோற்றியோரில் வர்த்தகப் பிரிவில் சின்னத்தம்பி தாட்சாயினி, கனகசபாபதி வரநிதி, ரட்ணம் நர்சிலா ஆகியோரும் கலைப்பிரிவில் சற்குணநாதன் தாட்சாயினி என்ற மாணவியும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். விஞ்ஞானப்பிரிவில் ஒரு மாணவி 2ஏபி சித்தியும் கணிதப்பிரிவில் ஒரு மாணவி ஏபிசி சித்தியும் பெற்றுள்ளனர்.

யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரியில் இருந்து தோற்றியோரில் வர்த்தகப் பிரிவில் மனோகரன் ரஜீவ், தெய்வேந்திரம் நாகதர்சினி, நடராஜா கஜேந்தினி ஆகியோர் 2ஏபி சித்தி பெற்றுள்ளனர். கலைப்பிரிவில் ஒருவர் 2ஏசி சித்தியும் விஞ்ஞானப் பிரிவில் ஒருவர் 3பி சித்தியும், கணிதப்பிரிவில் இருவர் 2சிஎஸ் சித்தியும் பெற்றுள்ளனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவர்களில் தே.தயானந்தி, க.கயல்விழி ஆகியோர் 3ஏ சித்தியும் 5 மாணவர்கள் 2ஏபி சித்தியும் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து தோற்றியோரில் கணிதப்பிரிவில் க.கோகிலன் என்ற மாணவனும் வர்த்தகப் பிரிவில் இ.சிபானி, க.கஜீபா ஆகிய இரு மாணவிகளும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவர்களில் கணிதப்பிரிவில் வை.பிரகலாதன் என்ற மாணவனும், வர்த்தகப்பிரிவில் செ.சர்மிளா, த.சுதர்சினி, ஜெ.விஜிதா ஆகியோரும் கலைப்பிரிவில் பா.மகிஜினி என்ற மாணவியுமாக மொத்தம் 5 பேர் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். விஞ்ஞானப் பிரிவில் ஒரு மாணவன் 2ஏபி சித்தி பெற்றுள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவர்களில விஞ்ஞானப்பிரிவில் கு.சுபித்திரா, சு.கலைவாணி ஆகியோரும் வர்த்தகப் பிரிவில் ம.மாலினி என்ற மாணவியும், கலைப்பிரிவில் ப.சர்மினி என்ற மாணவியும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். கணிதப்பிரிவில் ஒரு மாணவன் ஏபிஎஸ் சித்தி பெற்றுள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவர்களில் கணிதப்பிரிவில் அரியகுமார் ஸ்ரீகரன், யோகச்சந்திரன் ராகுல் மாதவன் ஆகிய இருவரும் விஞ்ஞானப் பிரிவில் இராசதுரை நிசாந்தன், சேதுராஜா வரண்பிரசாத் ஆகியோரும் வர்த்தகப்பிரிவில் தங்கவேலு பாலராஜா, சபாரத்தினம் தர்மராஜா, வல்லிபுரம் சபேசன் ஆகியோருமாக மொத்தம் 7 பேர், 3ஏ சித்தி பெற்றுள்ளனர். ஐந்து பேர் 2ஏபி சித்தி பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் இருந்து தோற்றியவர்களில் கணிதப்பிரிவில் வாசுகி விக்னேஸ்வரன் என்ற மாணவியும் கலைப்பிரிவில் கஜானா ஞானராஜா என்ற மாணவியுமாக 2பேர் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். 3பேர் 2ஏபி சித்தி பெற்றுள்ளனர்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலிருந்து தோற்றியோரில் வர்த்தகப்பிரிவில் எஸ்பத்மநாதன் என்ற மாணவன் 3ஏ சித்தி பெற்றுள்ளார். விஞ்ஞானப்பிரிவில் ஒருவர் 3பி சித்தியும் கலைப்பிரிவில் ஒருவர் பி2எஸ் சித்தியும் பெற்றுள்ளனர்.

(ஒ-10-12-31-173-ரி)

# மேல்மாகாண வைத்தியசாலைகளில் நாளை சங்கங்கள் வேலைநிறுத்தம்

## நாளைமறுநாள் நாடு முழுவதிலும் விஸ்தரிப்பு

கொழும்பு,ஓக.13

அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வையடுத்து, சுகாதாரச் சேவையிலுள்ள ஏனைய தரத்தினரின் சம்பளங்களில் ஏற்பட்டிருக்கும் முரண்பாட்டை நீக்காதிருப்பதை ஆட்சேபித்து மேல்மாகாண அரசு வைத்தியசாலைகளில் நாளை வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும். நாளைமறுநாள்முதல் இவ்வேலைநிறுத்தம் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

சுகாதாரச் சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றது. இக்கூட்டமைப்பில் 50 சங்கங்கள் இடம்பெறுகின்றன.

இதற்கிடையே சுகாதார அமைச்சின் சம்பள முரண்பாட்டுக்குழு இப்பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்க கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி வருகின்றது. இன்று தாதிமார் சங்கத்துடன் அக்குழு பேச்சு நடத்தும்.

கூட்டமைப்பு சமர்ப்பித்திருக்கும் யோசனைக்கு மாறான ஒரு யோசனையை தாதிமார் சங்கம் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பித்திருக்கின்றது.

(ஒ)

# இவ்வாண்டுமுதல் உயர்தரத்திலும் பாடசாலை மட்டத்தில் கணிப்பீடு

காரைதீவு,ஓக.13

கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சு இவ்வாண்டுமுதல் ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்பிலும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்தை அமுல் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பெறும் புள்ளிகள்/தரங்கள் 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்படும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழில் உள்ளடக்கப்படும்.

கல்வியமைச்சின் செயலாளர் வீ.கே.நாணயக்கார இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

உயர்தரத்தில் உயிரியல், இராசாயனவியல், பௌதீகவியல், விவ்சாய விஞ்ஞானம், மனைப்பொருளியல், சங்கீதம், நடனம் போன்ற பாடங்களுக்கு செய்முறை வேலை கட்டாயமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு தவணைக்கு ஒரு மாணவன் ஐந்து தடவைகள் கணிப்பீடுகளுக்கு உட்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

விமானக் குண்டுவீச்சின் எதிரொலி

# இஸ்ரேலியர்களைக் குறிவைத்து இரு தற்கொலைத் தாக்குதல்கள்!

ரெல்அவிவ்,ஓக.13

தென் லெபனான் பகுதியில் இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேலியர்களைக் குறிவைத்து இரண்டு தற்கொலைத் தாக்குதல்கள் நடந்துள்ளன. இதில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்; பன்னிருவர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் தலைநகரில் உள்ள ரோஷ் ஹெறாயின் என்ற இடத்தில் உள்ள சுப்பர் மார்க்கெட்டில் முதலாவது குண்டு நேற்று மாலை 3மணியளவில் வெடித்தது. இதில் குண்டுதாரியைத் தவிர மேலும் ஒருவர் கொல்லப்பட்டார்; ஏழுபேர் காயமடைந்தனர்.





முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்த சுப்பர் மார்கெட்டின் முன்புறம் உருக்குலைந்து காணப்படுவதையும், இரண்டாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

இச்சம்பவம் நடந்து சுமார் ஒரு மணித்தியாலயங்கள் கழிவதற்குள் மேற்குக் கரையில் அமைந்திருக்கும் பஸ்தரிப்பிடத்தில் இரண்டாவது குண்டு வெடித்தது. இதில் இருவர் கொல்லப்பட்டனர்.

இவ்விரு தாக்குதல்களையும் பலஸ்தீன தீவிரவாதிகளே நடத்தினர் என்று கூறும் இஸ்ரேலிய படையினர், இரண்டாவது குண்டை வெடிக்கச் செய்யும் முன் குண்டுதாரியை தாம் தடுத்து நிறுத்தியதாகவும்- ஆனால், அவர் நிற்காமல் போகவே அவரைச் சுட்டபோது குண்டு வெடித்தது என்றும் - தெரிவித்தனர்.

தீற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோராதபோதும், ஹமாஸ், இஸ்லாமிய ஜிகாத் ஆகிய அமைப்புகள் இச்சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லையென தெரிவித்துள்ளன.

ஆனால், மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தைக் குழப்பும் வகையில் பலஸ்தீன தீவிரவாதிகளே இத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

லெபனானில் உள்ள ஹமாஸ் அமைப்பின் நிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுக்ளுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று ஹமாஸ் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆயுதம் ஏந்தும் அன்னையர்கள்

பேரழிவு ஆயுதங்களை எதிர்த்து கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள 'அழும் அன்னையர்கள்' என்ற அமைப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

உலகில் பெருமளவு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடு அமெரிக்கா. இந்த லட்சணத்தில் அது மற்ற நாடுகளை பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகக் குற்றம் சுமத்தி வரும் அமெரிக்காவிடம் உள்ள அதிபயங்கர ஆயுதமான பங்கர் பஸ்டர் (இது தரையின் அடிப் பகுதி வரை ஊடுருவக் கூடியது. எதிரியின் பதுங்கு குழிகளை அழிக்கக்கூடியது) ஆயுதத்தை எதிர்த்தே அன்னையர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விசேட முகமூடிகள் அணிந்தபடி இறந்த குழந்தைகளைப் புதைக்க எடுத்துச்செல்வது போன்று பாவனை காட்டி அன்னையர் போராட்டம் நடத்தினர்.



ஈராக்கில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பத்திரிகை அலுவலகத்தின் முன்பாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் அமெரிக்கப் படையினர்.

# சதாமின் சகாவைத் தேடி அமெரிக்கப்படை 'கறுப்பு பருந்து' ஹெலியில் தேடுதல்

பக்தாத்,ஓக.13

சதாமுக்கு நெருக்கமான எயின் லாலின் என்பவரைத்தேடி அமெரிக்கப் படையினர் 'கறுப்பு பருந்து' ஹெலிகொப்டரில் நேற்று முன்தினம் ஈராக்கிய கிராமமொன்றில் தேடுதல் நடத்தினர். ஆனால், அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இச்சுற்றிவளைப் பின்போது 70 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

எயின் லாலின், அமெரிக்கா தேடி வரும் 55 பேரில் ஒருவர் ஆவார்.

அதேவேளை - திக்ரித்துக்கு வடக்கே ரோந்து சென்ற படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் மூவர் காயமடைந்தனர்.

மற்றொரு சம்பவத்தில், பக்தாத்திலிருந்து 40 மைல்கள் வடகிழக்காக பொலீஸ் நிலையமொன்றில் வைத்து அமெரிக்க வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சந்தேகத்துக்குரிய பொதியொன்றை பொலீஸ் நிலையத்திற்கு வெளியே கண்டு அதனைப் பரிசோதித்த போதே அது வெடித்து இச்சம்பவம் நடந்தது.

# சதாமின் வீழ்ச்சிக்குப் பின்னர் 8,000 ஈராக்கியர்கள் மாயம்

நியூயோர்க்,ஓக.13

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி வீழ்ந்ததையடுத்து அங்கு 8,000 பேர் மாயமாகிவிட்டனர். தங்கள் உறவினர்களின் கதி என்ன? என்று தெரியாமல் பலர் தவிக்கின்றனர்.

- இவ்வாறு "நியூஸ்வீக்" பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

ஐயாயிரத்துக்கும் மேலான ஈராக்கியர்கள் அமெரிக்கக் கூட்டுப்படைகளின காவலில் இருக்கின்றனர். ஏனையவர்கள் சக ஈராக்கியர்கள் மற்றும் அமெரிக்கப் படைகளுடன் நடந்த மோதலில் உயிரிழந்திருக்கலாம்.

ஈராக்கில் உள்ள சிறைகள் சூறையாடப்பட்டுள்ளன. அமெரிக்கக் கூட்டணிப் படையினர், தாங்கள் கைதுசெய்துள்ள ஈராக்கியர்களை முள்வேலியுடன் கூடிய திறந்த கூடாரங்களில் தங்க வைத்துள்ளனர்

கைதிகளை அமெரிக்கப் படையினர் மோசமாக நடத்துவதாகவும் பிற்பகலில் கடும் வெயிலில் முட்டி போடச செய்து தண்டனை அளிப்பதாகவும் கூறப்படுகிறது - என்றுள்ளது

இதனிடையே - காவலிலுள்ள 5,000 ஈராக்கியர்களில் 500 பேர் மட்டுமே போர்க்கைதிகள் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஈராக் கைதிகளை நடத்தும் விடயத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம் என ஒப்புக் கொண்டுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி, அவை விரைவில் சீர்செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்

மேலும், பாதுகாப்புக் காரணங்களுக்காகவே உறவினர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் கைதிகளைச் சந்திக்க அனுமதிக்கப்படுவதில்லை. சிறை சீரமைக்கப்பட்ட பின்னர் விதிமுறைகள் தளர்த்தப்படும் என்றும் அவர் கூறினார்.

## மிஸ் வியட்நாம் 'மிஸ்ஸானார்'

வியட்நாமில் அழகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை கடந்த வாரம் முதல் காணவில்லை என்று அறிவிககப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவியான இவரைத் தேடும் முயற்சியில் பொலீஸார் இறங்கியுள்ளனர். ஆங்கிலக் கல்வி கற்பதற்காகச் சென்ற இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# ஆப்கானின் ஜாபுல் மாகாணத்தை தலிபான்கள் தாக்கி கைப்பற்றினர்

வாஷிங்டன்,ஓக.13

ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்து வந்த தலிபான் படைகள் அமெரிக்கப் படைகளால் அந்நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டாலும் தலிபான்கள் மறைந்திருந்து தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

20 மாதங்களுக்கு பின்னர் தலிபான்களின் தாக்குதல்கள் தற்போது தலையெடுத்துள்ளன. ஆப்கானின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஜாபுல் மாகாணத்தில் பெரும்பகுதியை தலிபான்கள் தற்போது தம்வசமாக்கியுள்ளனர்.

அல்-குவைதா படைகளுடன் இணைந்து இத்தாக்குதல் மேற்கொளளப்பட்டது என்று கூறப்படுகிறது.

ஆப்கானில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஜாபுல் பகுதியை கைப்பற்றியதன் மூலம் கந்தகாரில் உள்ள அமெரிக்கப் படைகளுக்கு காபூலில் உள்ள அமெரிக்க இராணுவமையத்துடனான தொடர்புகளுக்கு குந்தகம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ம)

# பெப்ஸி சோதனைக்கு மூன்று வாரம் கெடு; மத்திய அரசுக்கு உயர் நீதிமன்று உத்தரவு!

புதுடில்லி, ஓக.13

பெப்ஸி குளிர்பானங்களைப் பரிசோதனை செய்து மூன்று வாரங்களுக்குள் அறிக்கையைத் தாக்கல் செய்யவேண்டும் என்று மத்திய அரசுக்கு டில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பெப்ஸி, கொக்கோகோலா உள்ளிட்ட குளிர்பானங்களில் பூச்சிமருந்து கலந்திருப்பது பற்றிய தகவல் கடந்த வாரம் டெல்லி ஆய்வு மையத்தினால் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இப்பானங்களில் உண்மையிலேயே பூச்சி மருந்து கலந்துள்ளதா என்ற சோதனை நடந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் தமது பானங்களை அங்கீகாரம் பெற்ற பரிசோதனைக் கூடங்களில் ஆய்வுசெய்யவேண்டும் என்று கோரி பெப்ஸி நிறுவனம் சார்பில் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறிப்பிட்ட பரிசோதனைக் கூடங்களில் பானங்களைப் பரிசோதனை செய்யவேண்டும் என்று பெப்ஸி நிறுவனம் வலியுறுத்த முடியாது. எந்தப் பரிசோதனைக் கூடங்களில் ஆய்வு செய்ய வேண்டும் என்பதை அரசு முடிவு செய்யும் என்றும் வாதத்தின் போது எடுத்துக் கூறப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி அகமது, பெப்ஸி நிறுவன பானங்களை சகல வசதிகளும் கொண்ட பரிசோதனைக் கூடங்களில் பரிசோதனையை 3 வாரங்களுள் முடித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

(ம)

## பாக்.வீரர்கள் இருவர் பலி!

இஸ்லாமபாத்,ஓக.13

ஆப்கானிலுள்ள அமெரிக்கப் படையினர் தவறுதலாகச் சுட்டதில் இரண்டு பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டனர்; ஒரு வீரர் காயமடைந்தார்.

இவர்கள் பாகிஸ்தானுக்கு வடமேற்கேயுள்ள எல்லைப் பகுதியைக் கடக்கும் போதே அமெரிக்கப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இது தவறுதலாக இடம்பெற்ற சம்பவம் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

## உலக அரங்கில்

### அமர்நாத் யாத்திரை நிறைவு பெற்றது

இந்தியாவில் தானாக உருவாகி மறையும் பனிலிங்கத்தை தரிசிக்கும் அமர்நாத் யாத்திரை நேற்றுடன் முடிவுற்றது.

கடந்த ஒரு மாதமாக யாத்திரிகர்கள் அமர்நாத்தில் உள்ள புனித பனிலிங்கத்தை வழிபட்டு வந்தனர்.

### பூட்டிய காரில் சிக்கி 10 மாத சிசு பலி!

கலிபோர்னியா,ஓக.13

அமெரிக்காவில் பூட்டிய காரில் சிக்கிய 10 மாத ஆண்குழந்தை இறந்தது.

கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் மார்க் வார்சாயர் கடந்த வெள்ளிக்கிழமை காலை இவர் தனது காரை கல்லூரி வளாகத்தில் நிறுத்திவிட்டு கல்லூரிக்குச் சென்றார். பூட்டிய காரின் உள்ளே அவரது 10 மாதக் குழந்தை இருந்துள்ளது. ஆனால், குழந்தை இருந்ததை அவர் மறந்துவிட்டதாகத் தெரிகிறது.

பூட்டியிருந்த காரின் இருக்கையில் பட்டியால் கட்டப்பட்டு குழந்தை இருப்பதை மாணவர்கள் கண்டு பொலீஸுக்குத் தகவல் தெரிவித்தனர். பின்னர் கார்க் கதவு திறக்கப்பட்டதும் காருக்குள் வெம்மை தாங்காதும், மூச்சுத் திணறியும் குழந்தை இறந்துவிட்டமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பேராசிரியர் கைது செய்யப்படவில்லை. பேராசிரியரும் அவரது மனைவியும் குழந்தையிடம் அன்பாகவே இருந்து வந்ததாக அவரது அண்டை வீட்டார் தெரிவித்தனர்.

# அமெரிக்க சரக்கு விமானம் சோலில் வெடித்துச் சிதறியது

அமெரிக்கச் சரக்கு விமானம் ஒன்று தென்கொரிய தலைநகரில் பறந்து கொண்டிருந்தவேளை நேற்று திடீரென வெடித்துச் சிதறியதால் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்கொரியாவில் உள்ள அமெரிக்க விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில், விமானம் வெடித்துச் சிதறியது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

'C-12 ஹறோன்' என்ற இந்தச் சரக்கு விமானம் வெடித்துச் சிதறியது ஒரு விபத்து என்று தென்கொரிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆனால், விமானம் வெடித்துச் சிதறியதற்கான காரணங்களை கண்டறிய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



தென்கொரியத் தலைநகரில் வீழ்ந்து வெடித்துச் சிதறிய அமெரிக்கச் சரக்கு விமானத்தை அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160/-. மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. தொடர்பு: 1.மான்ஸ் பாட சாலை வீதி, டச்றோட் உடுவில். 2.பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய் 3. மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (21336)

### புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று (13-08-2003) புதன் மாலை விநி யோகிக்கப்படும். பதிவு செய்தோரும் தேவைப்படுவோரும் தொடர்புகொள்ள வும். றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி T.P. 222-3529, 222-2867. (21324)

### மணமகள் தேவை

லண்டனில் நிரந்தரமாக வசிக்கும சுவாதி நட்சத்திரம் கொண்ட, 28 வயது மணமகனுக்கு பொருத்தமான படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1985 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(21335)

### தவறிவிட்டது

குப்பிளான் வடக்கு, ஏழாலையைச சேர்ந்த சிவதாசன் சிவாஜினியின் தே.அ.அ.(இல.785103548V)தவறிவிட டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.(21333)

மடத்தடி அல்வாய்க்கும் அத்தாய்க கும் இடையில மூக்குக்கண்ணாடி (08-08-2003இல்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ.செல்வராஜா சதாபொன்ஸ் மாலு சந்தி அல்வாய் என்னுமிடத்தில் ஒப்படைக்கவும் சன் மானம் வழங்கப்படும். (21346)

**Computer Typing**

சாதாரண தட்டெழுத்து,
சுருக்கெழுத்து, ஆங்கிலம்,
Ms Office, Page Maker,
Corel Draw, Photoshop
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

**STCA**

37(149). சிவன்பண்ணை வீதி.
கொட்டடி. யாழ்ப்பாணம்.
(21332) (21-11-1926)

### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
### THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக) (மேல்மாடியில்)

**SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
SHORT HAND TYPING**
சிங்களம்

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் எளியமுறையில் எழுத, வாசிக்க, கதைக்கக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

**புதிய பிரிவு ஆரம்பம்: 14.08.2003**

இ.லோகநாயகி
- நிர்வாகி

(21339) (26-21-11-19)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 29 - 04 - 1978



இறப்பு 05 - 08 - 2001

### கனகரத்தினம் ஜீவகாந்தன்

திதி: துதியை

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
இரண்டாண்டு உருண்டதய்யா
எங்களின் துயரம் ஆற்றிட வழியில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்கிறோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(21340) (26)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 - 05 - 1942



விண்ணில் 06 - 08 - 2001

### அமரர் சின்னக்குட்டி தியாகராசா

(தியாகு)

(முன்னாள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள ஒப்பந்தகாரரும், கர்ணன் வாணிப உரிமையாளரும்)

திதி: 13-08-2003

மனிதருள் நல்மாணிக்கமாய்த் திகழ்ந்த
மன்னவனே உந்தன் மலர்ந்த முகம்தன்னை
இனிமேல் நாம் காண்பதெப்போ? இன்பம் பொங்கும்
இதயமொழி கேட்பதெப்போ?

– குடும்பத்தினர்.

330, யோகபுரம், மல்லாவி. (21329) (21-11-19)

# PATRICIAN INSTITUTES
# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

**தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

## ஆரம்பம்: 18-08-2003

I A. Advanced Diploma in Computer Programming — *Duration 1 Year*
B. Diploma in Micro Soft Office — *Duration 6 Months*
C. Diploma in Type Setting — *Duration 3 Months*
D. Diploma in Computerised Accounting — *Duration 4 Months*
E. Diploma in Desk - Top Publishing — *Duration 6 Months*
F. Diploma in Access including S.Q.L — *Duration 3 Months*

II **CERTIFICATE COURSES:**

i) M.S. Word - 2000
ii) M.S. Excel - 2000
iii) M.S. Access - 2000
iv) M.S. Power Point
v) Visual Basic Ver 6.5
vi) Pascal
vii) d Base III+
viii) Page Maker
ix) Windows 95
x) Corel Draw
xi) d Base for Windows
xii) Print Shop Deluxe
Xiii) Adobe Photo Shop

*Each 3 Months*

| | | |
|---|---|---|
| III | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| IV | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள |
| V | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள் | காலம் 6 மாதங்கள் |
| VI | ஜெனரல் எலக்ரீஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VII | வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII | கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (On the Job Training வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX | மின் ஒட்டுநர் பயிற்சி (On the Job Training வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள |
| X | மரவேலை (With Use of Machinery) (On the Job Training வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| XI | குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

(VIII, IX, X பயிற்சிநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயிற்சி நிறைவில் மீண்டும் ஊக்குவிப்பு பணம் வழங்கி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுக்கு சிபார்சு செய்யப்படும்.

எமது நிறுவனத்தில் கணனிகள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.

Note:
1. பயிற்சிக் கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**PRODUCTION AND REPAIRING ON ORDER...!**
**கட்டமைத்தலும் திருத்துதலும்**

சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

**வாகன உரிமையாளருக்கான அறிவித்தல்**
**வாகன தகுதிச் சான்றிதழ் - 2003**
**FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**

2003ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதனை அறியத் தருகின்றோம்.

அத்துடன் மோட்டார் சைக்கிளுக்கான Engine No. பொறித்துக் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு

REGISTRAR
**PATRICIAN INSTITUTES**
59, ST.PATRICK'S ROAD, JAFFNA.

(சி-29467) (21-19-11)

உதயன்

## கண்முன்னே பறிபோகும் நமது கடல்வளம்

'எமது மண் சுரண்டப்படுகின்றது', 'மண்ணை மீட்போம்!' என்ற கோஷங்கள் ஒருபுறம் ஒலிக்கின்றன. மறுபுறத்தில் கண்ணில்படாமல் வேடத்தில் எமது மக்களின் மூலவளம் - வகை தொகையின்றி - சுரண்டப்படுகின்றது. நமது மக்களும் சமூகத்தினரும் அதைக் கண்டும் காணாதவர்கள் போல வாளாவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.சூசை ஆனந்தன் விசனத்தோடு இந்த விவரத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எமது கடல்வளம் அந்நியரால் சூறையாடப்படுவதை புள்ளி விவரங்களுடன் முன்வைத்த அவர், 'எமது கடற்பகுதியும் எமக்கு வேண்டும்' எனத் தமிழர்கள் கிளர்ந்தெழுவது அவசியம் என வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கையின் கடற்கரையோரத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி - ஏறத்தாழ மூன்றில் இரு பங்கு பிரதேசம் - தமிழர் தாயகத்தில்தான் உள்ளது. சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான கிலோமீற்றர் நீளத்துக்குக் கடற்கரையோரத்தை தமிழர் தாயகம் கொண்டிருக்கின்றது.

இந்தக் கரையோரப் பிரதேசத்தையும் இந்தக் கரையோரத்தை அண்டி செல்வம் கொழிக்கும் மூல வளங்களையுடைய ஆழ்கடலையும் கொண்ட நமது பிரதேசம் இந்தச் செல்வத்தின் காரணமாக வளஞ் சிறக்கும் பூமியாகத் திகழவேண்டும்.

ஆனால், உண்மை நிலைமையோ தலைகீழ். நமது கடற்றொழிலாளர் உட்பட முழுச் சமூகமுமே ஏழ்மையிலும் பட்டினிச் சாவிலும் வீழ்ந்து கிடக்கின்றது. ஆனால், யாரோ அந்நியர்கள் கடல் வளத்தைச் சுரண்டிச் செல்கின்றார்கள்.

யுத்தம், கடற்படையினரின் கெடுபிடி, அரசின் கடல்வலயக் கட்டுப்பாடுகள் என்ற இன்னோரன்ன காரணங்களில் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் கடலில் இறங்கிக் கடற்றொழில் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த யுத்தநிறுத்த காலத்தில்கூட நீண்டதூரம் கடலில் சென்று தொழில் செய்ய முடியாத நெருக்குவாரம் அவர்களுக்கு.

ஆனால், வெளிப்பிரதேச, வெளிநாட்டு கடற்றொழிலாளர்களுக்கோ இந்தக் கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் இல்லை.

இந்திய ட்றோல்ர்களும், தென்பிரதேச மீனவர்களின் சுருக்கு வலைப் படகுகளும் தமிழர் தாயகக் கடற்பிரதேசத்தின் வளங்களை வகை தொகையின்றி அள்ளிச் செல்கின்றன. அதேசமயம், ஆழ்கடலில் தாய்வான், கொரியா, சீனா என்ற பிற நாட்டுக்கு கப்பல்களின் தொழில் ஆக்கிரமிப்பு வேறு.

போர்க் காலத்தில் வடக்கு - கிழக்கு கடல் பிரதேசத்தில் கடல் சண்டைகள் நடக்கும் வாய்ப்பு - சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்தனவாதலால், அது ஆபத்தான இடம் எனக் கருதி பிறநாட்டுப் படகுகள், ட்றோலர்கள், கப்பல்கள் ஆகியன சற்றுத் தூரத்தே ஒதுங்கியிருந்து கடல் வளத்தை அள்ளின. இப்போது யுத்தநிறுத்தம் வந்திருப்பது அவர்களுக்கு வாய்ப்பாகிவிட்டது. அச்சமின்றி, எட்டி வந்து நமது கரையை நெருங்கிய கடற்பிரதேசத்தில் கடல்வளத்தை கொள்ளையிட்டுச் செல்லமுடிகின்றது.

நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மீன்பிடிக் கலங்கள் இல்லாததாலும், நீண்டதூரம் கடலில் சென்று தொழில் செய்வதற்கு வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்குத்தடை விதிக்கப்பட்டிருப்பதாலும் அவர்கள் கரையிலிருந்து பார்த்திருக்க அவர்களது கடல்வளம் பிறரால் கொள்ளை போய்க் கொண்டிருக்கின்றது.

இதனால்தான் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்று மட்டுமன்றி, 'எமது கடற்பரப்பும் எமக்கு வேண்டும்' ,என்றும் தமிழ்ச் சமூகம் கிளர்ந்தெழ வேண்டுமென வலியுறுத்துகிறார் கலாநிதி சூசை ஆனந்தன்.

இவ்வளவு கடல்வளம் உள்ள நமது சமூகம் எவ்வளவு செல்வச் செழிப்புடன் விளங்கவேண்டும்! அது இப்படிக் கிடந்து வசதியின்றி அல்லலுறுகின்றதே! - என்று அவர் வேதனைப்படுவது சரியானதே.

இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்காமல் அரசு பார்த்திருக்கிறது அல்லது நடவடிக்கை எடுக்கப் பின்னடிக்கின்றது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து முடியாமல், தமிழர்களின் பிரதிநிதிகளான புலிகள் பொங்கி எழுந்து நடவடிக்கை எடுக்க முயன்றால் அதை அரசு வேறு விதமாகச் சித்திரிக்கின்றது என்று அவர் சுட்டிக் காட்டுவதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

# பனை, தென்னை வள தொழில்நுட்ப கற்கைநெறி விரைவில் பல்கலையில்

## ஆரம்பிக்கும் என்கிறார் விவசாய பீடாதிபதி

யாழ்ப்பாணம்,ஓக.12

பனை தென்னைவள தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறி ஒன்று விரைவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் எஸ்.இராசதுரை.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தின் ஏற்பாட்டில் கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற பனை, தென்னை வள நிறுவனங்களின் உற்பத்தி அபிவிருத்தியை மேம்படுத்துதல் தொடர்பாக நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில்தான் 90 சதவீதமான பனைமரங்கள் காணப்படுகின்றன. இவ்வளங்களின் பயனை முழுமையாகப் பெறுவதற்கு ஆவனசெய்யவேண்டும்.

இந்த நோக்கிலேயே விரைவில் பனை, தென்னைவள தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறியை யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்தத் துறையை மேம்படுத்துவதற்கு - வளப்பதற்கு - தேவையான தொழில்நுட்ப உதவிகளை தேவையான வேளைகளில் தெற்கிலும் வெளிநாடுகளிலும் இருந்து பெறமுடியும்.

அதற்கு முன்னர் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொண்டு தரமான உற்பத்திகளைக் கொண்டுவந்தால் அவற்றுக்கு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நிறைய சந்தை வாய்ப்புக்கள் உள்ளன - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், வடமாகாண பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தி.சபாரட்ணம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதியும் இதில் கலந்துகொண்டனர். (ம)

# அமெரிக்க சட்டத்தை எதிர்த்து ஈழத் தமிழர் வழக்குத் தாக்கல்

வாஷிங்ரன்,ஓக.13

அமெரிக்காவில் உள்ள தேச பக்த சட்டத்தை (பேட்ரியட் சட்டம்) எதிர்த்து அமெரிக்காவின் சிலிக்கான் வேலி பகுதியில் வசிக்கும் இலங்கைத் தமிழரான டாக்டர் ஜெயலிங்கம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் இருந்த 110 மாடி உலக வர்த்தக மைய இரட்டைக் கட்டடங்கள் பயங்கரவாதிகளால் 2001 செப்ரெம்பர் 11இல் தகர்க்கப்பட்டன. அதையடுத்து தேச பக்த சட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் இயற்றியது.

அதன்படி, தடைசெய்யப்பட்ட (பயங்கரவாத) அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி புரிவதும் கிரிமினல் குற்றமாகும். தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு அளிக்கப்படும் ஆலோசனையின் நோக்கம் எதுவாக இருந்தபோதிலும் - அது பயங்கரவாதத்துடன் சம்பந்தமில்லாததாக இருந்தபோதிலும் அது கிரிமினல் குற்றமாகும் என்று கூறுகிறது அச்சட்டம்.

இச்சட்டப் பிரிவானது மனித உரிமைகளை மீறுவதாகும். மிகவும் அடிப்படையான நான்கு உரிமைகளில் ஒன்றை அது மீறுகிறது. ஒருவர் விரும்பும் அரசியல் கொள்கைகளை, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான அடிப்படை உரிமையை அச்சட்டப்பிரிவு மீறுகிறது. எனவே, அதை ரத்துச் செய்யவேண்டும் என்று கூறி லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த ஜெயலிங்கம் இனப் பிரச்சினை காரணமாக குடும்பத்துடன் இடம்பெயர்ந்து அமெரிக்காவில் குடியேறியவர். எனினும், தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டு அமெரிக்காவில் உள்ள மக்களுக்கு மருத்துவ சேவையை அளித்து வருபவர். ஆனால், அப்பகுதியில் உள்ள பல மருத்துவமனைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. புலிகள் அமைப்பு அமெரிக்காவால் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும்.

எனவே, அதன் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு உதவி புரிந்தால் மேற்கூறிய சட்டப் பிரிவின்படி தன் மீது நடவடிக்கை எடுக்கமுடியும் எனக் கருதுகிறார் டாக்டர் ஜெயலிங்கம். எனவே, அச்சட்டத்தை எதிர்த்து அவர் வழக்கு தொடர்ந்துள்ளார். (ம)

## காணித் தகராறு தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக காணித் தகராறு தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துவருவதாக யாழ். பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய காணித் தகராறுகள் முற்றி அடிதடியில் முடிவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் தெரிந்தவர்களுக்கு வாடகைக்கு வீடுகளைக் கொடுத்திருந்த அவற்றின் உரிமையாளர்கள் தற்போது அவற்றைத் திரும்பப் பெற்றுவருகின்றனர். இதன்போது அயலில் உள்ள வீட்டுக்காரார்களுடன் காணி எல்லை தொடர்பாகப் பிரச்சினைகள் எழுகின்றன.

வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தவர்கள் திரும்பிவந்து தமது வீடுகளை விற்கும்போது இத்தகைய பிரச்சினைகள் உருவாகி வருகின்றன என்றும் பொலீஸார் கூறுகின்றனர்.

இது தொடர்பான முறைப்பாடுகள் தினமும் யாழ். பொலீஸ் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்று வருவதாகப் பொலீஸ் நிலையப் பதிவேடுகள் கூறுகின்றன. (ம-ரி)

## மணல் திருட்டுத் தொடர்பாக இரு டிராக்டர்கள் பறிமுதல்

### தென்மராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.13

கச்சாய் கடற்கரைப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த டிராக்டர்கள் தென்மராட்சியில் கலாசாரத்தைப் பேணுவோரால் அண்மையில் பறிமுதல் செய்யப்பட்டன.

கொடிகாமம் மற்றும் கச்சாய் பகுதிகளைச் சேர்ந்தவர்களின் டிராக்டர்களே பறிமுதல் செய்யப்பட்ட பின்னர் வழங்கப்பட்டன.

கச்சாய்ப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாகவே சட்ட விரோதமாக மணல் ஏற்றப்பட்டு வந்தது. இதனைத் தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரிடமும் பல தடவைகள் கோரி இருந்தனர். எனினும், தொடர்ந்தும் மணல் திருட்டு இடம்பெற்று வந்தது.

இதனை நிறுத்தும் வகையில் இந்தச் செயலில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன. ஆனால், அதனையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தமது செயலைத் தொடர்ந்து வந்தனர்.

இதனை அடுத்து அவர்களது டிராக்டர்கள் முன்னர் ஒரு தடவையும் சம்பந்தப்பட்டவர்களால் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர், தாம் இத்தகைய செயல்களில் ஈடுபடமாட்டோம் என்று அவர்கள் உறுதி அளித்ததைத் தொடர்ந்து டிராக்டர்கள் அவர்களிடம் திருப்பி வழங்கப்பட்டன.

ஆனால், மீண்டும் அவர்கள் மணல் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. இது குறித்து அப்பகுதிப் பொதுமக்களும் பல முறைப்பாடுகளைச் செய்திருந்தனர். இதனை அடுத்து மணல் திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (ம-6)

### நாளை

ஆடி 29
வியாழக்கிழமை
(14.08.2003)
திதி : துதியை
முற்பகல் 10.29 வரை
நட்சத்திரம: சதயம்
முற்பகல் 9.08 வரை
சுபநேரம்: 7.33 - 9.05
ராகுகாலம்: 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

விரும்பத்தகாத உண்மைகளைத் தெரிந்து வைத்திருப்பது தவறல்ல. ஆனால், அதை வெளியே சொல்லலாமா என்று பலமுறை யோசித்துப் பார்க்கவேண்டும்.

## கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் தெற்காசியாவின் சிறந்த விமானத்தளமாக!

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் தெற்காசியாவின் சிறந்த விமானத்தளமாக 2006ஆம் ஆண்டுக்குள் நவீனப்படுத்தப்படவுள்ளதாக விமானத்துறைக்குப் பொறுப்பான அதிகாரி ஹேமசிறீ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜப்பான் வழங்கிய, வழங்க இணங்கியுள்ள 10 கோடி அமெரிக்க டொலர் செலவில், நான்கு கட்டுமானப் பிரிவுகளாகப் புனரமைக்கப்படவுள்ள கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம், 2003ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டுவரை, தொடர்ச்சியாகப் புனர்நிர்மாணிக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டில், தெற்காசியாவின் மிகச்சிறந்த விமானநிலையமாக மாற்றம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விமான இறங்குபாதைகள், பயணிகள் நேரடியாக விமானத்தில் நுழைவதற்கான வசதிகள் உட்பட கணனி முறையில் அனைத்து நிர்வாகத்தையும் கண்காணிப்பையும் நிர்வகிக்கும் திறமை பொருந்திய மிகச்சிறந்த விமானத் தளமாக இதை மாற்றியமைக்கும் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுற்றுச்சூழல் அதிகார சபை அலுவலகம் செயலகத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

சுற்றுச் சூழல் அதிகார சபையின் அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள கட்டட வளாகத்தில் இந்த அலுவலகம் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இரண்டு அலுவலர்களும் சுற்றுச் சூழல் அதிகார சபையினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான அனைத்து நடவடிக்கையையும் இந்த அலுவலகம் மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தின் பணிகளை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு மேலும் பல அலுவலர்கள் நியமிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

## சிறைச்சாலை நிர்மாணத்துக்கென 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ். சிறைச்சாலைக் கட்டடப்பணிகளின் ஆரம்ப கட்ட வேலைக்காக மூன்று லட்சத்து 30ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரம் தெரிவிக்கிறது.

ஆறு கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ள யாழ். சிறைச்சாலைக் கட்டட வேலைகள் தாமதமாகி வருவதை உள்துறை அமச்சர் ஜோன் அமரதுங்க யாழ். வந்தபோது சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து சிறைச்சாலை அமைப்பதற்குரிய ஆரம்ப கட்ட வேலைகளுக்கென 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபா சிறைச்சாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

இதேவேளை, இச்சிறைச்சாலை அமைய உள்ள இடத்தில் சுற்றுலாவிடுதியொன்றை அமைக்கவும், சிறைச்சாலையை வேறு இடத்தில் நிறுவவும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ஜோன் அமரதுங்காவிடம் அமைச்சர் மகேஸ்வரன் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வியக்கவைக்கும் எரிபொருள் சிக்கனம்

## அறிமுகம்

bajaj Byk

புத்தம் புதிய bajaj Byk மோட்டார் சைக்கிள் வேகம் கூடியது, சொகுசானது, நேர்த்தியானது, சிக்கனமானது.

நிர்ணய பரிசோதனை நிபந்தனைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட 92 CC 4-ஸ்ட்ரோக் மோட்டார் சைக்கிள் ஒரு லீட்டரில் 100 கிலோமீட்டர்* தூரம் ஓடக்கூடியது. திறமையான எரிபொருள் சிக்கனத்துடன் bajaj Byk உங்களை ஏனையவர்களிலும் பார்க்க முன்னணியில் திகழ வைக்கிறது.

bajaj Byk வகைகளை உங்களுக்கு வழங்குவோர் நம்பிக்கைக்கும் உத்தரவாதத்திற்கும் நிகரற்ற, நாடளாவிய சேவை / உதிரிப்பாக விநியோக வலைபின்னல் என்பனவற்றுக்கு அனைவரும் அறிந்த டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஆகும். DPMC எந்நேரமும் உங்கள் சேவைக்கு.

bajaj Byk ன் சில இணையற்ற அம்சங்கள்

- 1 லீட்டரில் 100 கிலோமீட்டர் ஓடக்கூடியது*
- 92CC 4-ஸ்ட்ரோக் என்ஜின்
- வாயு இயக்கத்திலான ரகம்
- கவர்ச்சியான பெட்ரோல் டாங்க்
- ஒப்டோபிரிஸம் MFR முன்புற விளக்கு
- 4 வேக கியர் பெட்டி
- நிர்ணய பரிசோதனை நிபந்தனைகளுக்கு அமைவாக

சௌகரியமாக சவாரி செய்யுங்கள்




தன்னிகரற்ற உத்தரவாதம்

பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

## DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 தொலைநகல் : 074-700677, 687175

மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 074-715050

வெப்தளம் : www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தக்கண்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, பக்கலை.

சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 074-700600

## துரித சாரதிப் பயிற்சி

ஒழுங்கான துரித வாகன சாரதிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்) விரைவில் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

| | |
|---|---|
| **கனன் தொலைத் தொடர்பகம்** | **தயூரி வீடியோ** |
| 535, பருத்தித்துறை வீதி, | பஸ் நிலையம், |
| நல்லூர். | அச்சுவேலி. |

அடுத்த குழுவுக்கான பயிற்சி ஒகஸ்ட் 15 இல் ஆரம்பமாகும்.
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை)

(21319)(24-11-19)


# பொது மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

வடமராட்சி கிழக்கிலுள்ள ஆழியவளையில் பொது மண்டபம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இது வடமராட்சி கிழக்கிலுள்ள புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் மக்களின் நிதி உதவி மூலம் அமைக்கப்பட்டது.

உடுத்துறை கிராம அலுவலர் வ.தவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கள விளக்கினை வடமராட்சி கிழக்கு புனரமைப்பு குழுத் தலைவர் சி.பொன்னம்பலமும் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ஐ.சிவஞானமும் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறை மக்கள் தொடர்பாளர் யாழ்.மன்னன் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து மண்டபத்தின் பெயர் பலகையை ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனை பொறுப்பாளர் ஈழவாணி திரைநீக்கம் செய்துவைத்தார். வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை நாடாவினை வெட்டி மண்டபத்தினைத் திறந்துவைத்தார். (ம-6)

### வினா - விடை போட்டி

யாழ்.மறைக் கல்வி நடுநிலையம் நடத்தும் கத்தோலிக்க மாணவர்களுக்கான வினாவிடைப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் பங்கு, கோட்ட, மறை மாவட்ட ரீதியாக நடைபெறும். இது தொடர்பான மேலதிக விபரங்கள பங்குத் தந்தையாகளிடம் அறிந்துகொள்ளலாம்.(ம-30)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், சிவன் கோயிலடி
உமா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் **திரு.ச.இந்திரகுமார்**
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
### சண்முகராசா கைலாசபதி
*(கைலாசம் அக்கா)*

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
லிங்கம் உலோகத் தொழிலகம்,
*264, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

(21330) (24-11-19)



## பதவி வெற்றிடங்கள்

"அருளகம்" சிறுவர் இல்லம்,
கோவில்குளம், வவுனியா
பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

**1. அலுவலக நிர்வாகஸ்தர் (ஆண்)**
*தகைமைகள்:* தமிழ், ஆங்கிலம் தாராள பயிற்சி வேண்டும். வயது 35 தொடக்கம் 50 வரை. சைவசமயியாய் இருத்தல்வேண்டும். முன் அனுபவம் வேண்டும். விசேடமாக கணனி அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

**2. சிறுவர் விடுதி பராமரிப்பாளர் (ஆண்)**
*தகைமைகள்:* தமிழ், ஆங்கிலம் போதிய அறிவு வேண்டும். வயதெல்லை 40-50 வரை. சைவசமயியாய் இருத்தல் வேண்டும்., முன்அனுபவம் வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தைத் தயார்செய்து அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 18.08.2003ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அறங்காவலர்
அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரர், அருளகம்,
கோவில்குளம், வவுனியா.

(21334) (24-11-19)



## A/L - 2004 DAY CLASS

| | |
|---|---|
| தமிழ் - க.தர்மராஜா | அளவையியல் - P.கமல் |
| இ.நாகரிகம் - K.சத்தியதாசன் | நாடகம் - S.சத்தியா |
| புவியியல் - K.கிரிதரன் | அரசியல் - T.திருமுருகன் |

பிரிவு - I வார நாள்கள் பிரிவு II சனி, ஞாயிறு
*ஆரம்பம்:* 14, 16.08.2003 (வியாழன், சனி)
இரு இடங்களில் இரு பிரிவுகள் காலை 8மணி (பழைய நேரம்)

| | |
|---|---|
| நியூட்டன் | திகழ் கல்வி நிறுவனம் |
| ஆரியகுளம் சந்தி, | K.K.S. வீதி, |
| யாழ்நகர். | இணுவில். |

(21328) (24-11-19)



## IELTS

**INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM FOR BASIC LEARNERS**

AFTER WORK
AFTER SCHOOL

108 மணித்தியாலங்கள்
அடிப்படையிலிருந்து 6 மாதம்
பாடநெறி ஆரம்பம்:
01.09.2003

"ACADEMIC" வினாத்தாளை எடுக்கவிரும்பிய மாணவர்களுக்கு
- ✦ தனிப்பட்ட கவனிப்புடன் கூடிய பாட நெறி.
- ✦ பரீட்சைக்குத் தேவையான ஆலோசனைகளுடன் பயிற்சிப் பரீட்சைகள்.
- ✦ புதிய கேம்பிறிஜ் Modules ஒலிப் பேழைகளுடன் கூடிய சுய Access உபகரணங்கள்.

கல்வி - தொழில் செய்ய வெளிநாடு செல்வதற்கு விஸாபெற இந்தக் கல்விமுறை அவசியமானது.

*தொடர்பு:* **இணைப்பாளர்**
90, நல்லூர் குறுக்குத்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(21342) (24-14-17)



## துயர் பகிர்கின்றோம்

எமது சங்க அங்கத்தவர்
**திரு.ச.ஜெகதீஸ்வரராசா**
அவர்களின் அன்புத் தாயார்
### திருமதி சண்முகராசா கைலாசபதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

மாவைக்கந்தன்
சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்,
மாவிட்டபுரம்.

(21318) (26-24-11-19)






சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

சமாதான முன்னெடுப்புக்களால் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நம் பிள்ளைகள் பயனடைகின்றனர். நாடும் நன்மை பெறுகிறது. தம் சிறு பராயத்தை அவர்கள் மீண்டும் கண்டு மகிழ்கின்றனர். வீடு திரும்புவதில் மகிழ்ச்சி கொண்டனர். மீண்டும் பாடசாலை செல்லும் வாய்ப்பைப் பெற்றனர். சோகத்தின் சாயல் புன்னகையாக மாறி உள்ளது. நாம் இழக்க முடியாதவற்றுள் ஒன்று புன்னகை. நிரந்தர சமாதானம் காண நம்மாலான அத்தனையையும் செய்வோம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka

Grant McCann

## சிறுதானிய விளைச்சல் அமோகம்

யாழ்ப்பாணம்,ஓக.13

வலி.தென்மேற்கில் இவ்வருடம் எள்ளு, பயறு, கௌபி என்பன விவசாயிகளுக்கு நல்ல அறுவடையைத் வழங்கியுள்ளதாக விவசாய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பெரும்போக நெல் அறுவடையை தொடர்ந்து காணப்பட்ட சாதகமான காலநிலையே சிறுதானிய உற்பத்தி அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

குறிப்பிட்ட சில கிராமங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் அட்டகாசத்தினால் சிறுதானியங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது எள்ளு ஒரு கிலோ 70 ரூபா முதல் 80 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத தக்கது. (ம-185)

## பெண்ணின் நகைகள் மோட்டார் சைக்கிள் இளைஞர்களால் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்க நகைகள் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீசாலைப் பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் கச்சாய் வாகையடியினைச் சேர்ந்த பெண்ணின் நெக்லஸ் மற்றும் சங்கிலி என்பன பறிபோயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதியில் வந்து கொண்டிருந்த இந்தப் பெண்ணிடம் வினவுவது போன்று மோட்டார் சைக்கிளில் மெதுவாக அருகே வந்த இளைஞர்கள் திடீரென அவரது கழுத்தில் இருந்த நகைகளை அறுத்துக் கொண்டு கொடிகாமத்தினூடாக தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## சமுர்த்தி அதிகாரிகள் நால்வருக்கு பாராட்டு

திறமையாகச் செயற்பட்ட 4 சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளில் நால்வருக்கு வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா கையொப்பமிட்ட பாராட்டுப்பத்திரம் கடந்த வாரம் வழங்கப்பட்டது.

வலி.தென்மேற்கு பிரிவில் குறுகிய காலத்தில் அதிகளவிலான சிறு குழுக்கள், சமுர்த்தி சங்கம் ஸ்தாபித்தல், மக்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல் போன்ற விடயங்களில் சிறப்பாக செயற்பட்டு மக்களை சமுர்த்தி வங்கிச் செயறபாட்டுடன் இணைய ஆலோசனை வழங்கியதற்காகவும், வங்கி செயற்பாட்டிற்கு உதவிபுரிந்து ஆற்றிய உயர்ந்த வினைத்திறன் மிக்க சேவைக்காகவும் இந்தப் பாராட்டுப்பத்திரம். வழங்கப்பட்டுள்ளது. (ம-185)


**சைன்**
உடுவில்
**2004 A/L Day CLass**
கலை. வர்த்தகப் பிரிவு ஆரம்பம்
15-08-2003
கணனி வகுப்புகளும் நடைபெறுகிறது.
(21331) (21-18-19)

**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
A/L Day Class.
பொருளியல்
¥.வரதராஜன்
மு.ப.9மணி முதல் 2மணி வரை.
(சி-29461) (21-11-19)

**CHEMISTRY CENTRE**
Temple Road, நல்லூர்.
A/L 2005
"GENERAL CHEMISTRY"
பிரிவு I: Mon. Fri. 3-4 p.m.
பிரிவு II: Tue. Thur. 3-4 p.m.
"வெப்ப இரசாயனம்"
பிரிவு I: Wed. 6.30-7.30 a.m.
பிரிவு II: Wed. 3-4 p.m.
Basic மீட்டலுடன் கூடிய வினா விடை
By: அன்பழகன்


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொருளாளரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய

திரு.தி.இராஜேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**M.T.திருநாவுக்கரசு**

அவர்களின் பிரிவுத்துயர் பகிர்ந்து பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.
(சி-29450)(21-11-19)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 27 - 03 - 1925
மறைவு: 06 - 08 - 2001

**அமரர் சி.வைரவிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற அதிபர்- சரசாலை)

திதி: ஆடி அபரத் துதியை (13-08-2003)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
இல்லத்தில் வழிகாட்டி நின்றவரே!
காலத்தால் நாமுமமைப் பிரிந்தாலும்
ஞாலத்தில் தொடரும் நின் நினைவலைகள்!

\- குடும்பத்தினர்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
(21259)(21-11-19)

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்: 05 - 11 - 1928
மறைவு: 13 - 08 - 2000

**திருமதி இரத்தினம் வைரமுத்து**

கண்மணி போல் எமை வளர்த்த கருணை நிறை இரத்தினமே!
விண்னுயர வஸந்தகான சபாவை வளர்த்துவிட்ட விளைநிலமே!
மண்ணதனில் உன்னுருவம் மறைந்துதான் போனாலும்
எண்ணமதில் எந்நாளும் வாழ்கின்றாய் எம்முடன் நீ.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'சாரங்கா'
பிரதான வீதி,
காங்கேசன்துறை.
(21231)(21-11-19)

## வேலை வாய்ப்பு

வலி.மேற்கில் பிரபல தனியார் நிறுவனமொன்றில் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

ஆண்கள்/பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. கணக்காளர் (க.பொ.த. உயர்தரத்தில் வணிகக் கல்வி கற்றிருத்தல் வேண்டும்)
2. அலுவலக எழுதுவினைஞர் (க.பொ.த. உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்)
3. கணனி தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள்
4. அலுவலக ஊழியர்கள்

☛ தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நேர்முகத் தேர்வின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்ப முடிவு திகதி: 20-08-2003

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
விளம்பர இல.1984,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(சி-29451) (21-11-19)

## முதலாம் ஆண்டு நினைவு மலர்



**திருமதி வல்லிபுரம் மகேஸ்வரி**

அன்னை மடியில்: 04-06-1939
ஆண்டவன் அடியில்: 26-07-2002

எமது எண்ணமலர்ப் பொய்கையில்
என்றென்றும் பவனிவரும் அன்னையே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும் ~ உம் நினைவு
எம்மைவிட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகிறோம.

திருமதி சின்னராசா சூரியகலா
திருமதி மகேந்திரராசா அற்புதராணி
திரு. வல்லிபுரம் தேவகுமார் (ஜேர்மனி)
திரு. வல்லிபுரம் உதயகுமார் (சுவிஸ்)
திரு. வல்லிபுரம் சிவகுமார் (சுவிஸ்)
திரு. செல்லையா செல்வரட்ணம் (சகோதரர்)
பேரப்பிள்ளைகள் (ஹொலண்ட்)

'பிரிந்தா இல்லம்'
கச்சாய் வடக்கு, கொடிகாமம்.
(21225)(21-11-14)


**SHARP** be sharp
ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.
Browns Electronics Live it up
Browns Group of Companies
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# லிப்டுக்குள் மின் தாக்கி தமிழ் இளைஞர் மரணம்!

## கொழும்பு அடுக்குமாடியில் பரிதாபம்

கொழும்பு,ஓக.13

மேல்மாடியிலிருந்து கீழ்மாடிக்கு 'லிப்டில்' இறங்கிய தமிழ் மாணவர் மின்சாரம் தாக்கி லிப்டினுள்ளேயே உயிரிழந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக் கிழமை இரவு 9.45 மணியளவில் கொழும்பு மெசஞ்சர் வீதியில் 'பீனிக்ஸ்' அடுக்கு மாடிக்கட்டடத்தில் உள்ள லிப்டிலேயே இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவரான ராஜ சேகரன் செந்தூரன் (வயது-22) கனடாவுக்குச் செல்வதற்குக் காத்திருந்தவர் எனவும் -

கணனி வகுப்பில் கற்று வந்தவர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அடுக்குமாடிக் கட்டடத்தில் நான்காவது மாடியில் ராஜசேகரன் செந்தூரன் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக வசித்துவந்தார்.

லிப்டுக்குள் மின்சாரம் தாக்கியதற்கான சரியான காரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. லிப்ட் கீழ் மாடிக்கு வந்தபோது அதற்குள் சடலமாக இவர் கிடந்ததை மட்டுமே தாம் கண்டதாக அந்தக் கட்டடத்தில் பாதுகாவலராகக் கடமையாற்றும் பொன்னம்பலம் என்பவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

மரணவிசாரணை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி திருமதி டி.ஐ.எல்.ரத்நாயக்க, மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

**பரந்தன்- முல்லைத்தீவு வீதியில்**

# இருவேறு விபத்துக்களில் ஒருவர் பலி; மூவருக்கு காயம்

வவுனியா,ஓக.13

முல்லைத்தீவு, பரந்தன் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் ஒருவர் உயிரிழந்தார்; மூவர் காயமடைந்தனர்.

முற்பகலில் பரந்தன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த சைக்கிள் ஒன்றினை பின்னால் வந்த 'ஹயஸ்' வான் ஒன்று மோதியதில் சைக்கிளில் இருந்தவரான, முரசுமோட்டையைச் சேர்ந்த துரைராசா குணமணி (வயது38) என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சைக்கிளைச் செலுத்தி வந்த துரைராசா யோகேந்திரம் என்பவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து இடம்பெற்ற இடத்துக்கு சற்றுத்தள்ளி அன்று காலை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்துக்கும் சைக்கிளுக்கும் இடையில் இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் சென்ற இருவரும் காயமடைந்தனர். (ம-164)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று!

யாழ்ப்பாணம்,ஓக.13

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6மணிக்கு 'முருகனின் அருள்' என்னும் பொருளில் செல்வன் குணபாலசிங்கம் கோபிலன் சொற்பொழிவாற்றுவார். (ம-10-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையினால் நல்லூர் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று புதன் கிழமை மாலை 6மணிக்கு 'மீனாட்சி கல்யாணம்' பற்றி சி.வை.நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.13

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை ஒட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் சிவஸ்ரீ சோ.உமாரமண சர்மாவின பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ஆர். இராதாகிருஷ்ணன், மிருதங்கம் - கே.கண்ணதாசன், முகர்சிங் - என்.சதீஸ்குமார் ஆகியோர் பற்கேற்கவுள்ளனர்.

# கல்விக்கான செலவு அதிகரிக்கின்றது ஆனால் அடைவு மட்டும் குறைகிறது

## தொண்டமனாறு வெளிக்கள நிலையத் தலைவர் உரை

யாழ்ப்பாணம்,ஓக.13

சமகாலத்தில் கல்விக்கான செலவு அதிகரித்துச் செல்கின்றது. ஆனால், அடைவுமட்டம் குறைந்துசெல்கின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அதிபரும் தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் தலைவருமான கே.எஸ்.குகதாஸன்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பு அமைந்துள்ள பாடசாலைகளின் இணைப்பாளர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வித்தரமானது வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள் உடனடியாகக் கண்டறியப்படவேண்டும். கண்டறியப்பட்ட பின்னர் மீண்டும் அதனை பழைய நிலைக்கு உயர்த்தவேண்டும்.

கல்வி அடைவுமட்ட வீழ்ச்சியானது பெரும் கவலையைத் தருகின்றது. கல்வித்தரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை ஆசிரியர்கள் மீதும் தனியார் கல்வி நிலையங்கள் மீதும், சமகாலச் சூழல்மீதும் மாறி மாறிச் சுமத்திவிட்டு விமர்சனம் செய்வதில் அர்த்தமில்லை.

கல்விதரம் வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள் என்ன என்பது இனங்காணப்பட்டு அவை தெளிவுபடுத்தப்படவேண்டும். கல்வித்தரத்தை மீண்டும் மேல்நிலையப்படுத்துவதற்கான முன்முயற்சிகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும். இந்த முயற்சியில் கல்வியாளர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள் எதிர்காலச் சமூகத்தின் நன்மையைக் கருத்திற்கொண்டு அர்ப்பணிப்போடு செயற்படவேண்டும்.

சமகாலத்தில் கல்விக்கான செலவீனம் அதிகரித்து செல்கின்ற போதிலும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் குறைவடைந்து செல்கின்றது. இந்தநிலை விஞ்ஞான பாடத்துறையில் மட்டுமல்ல கலைத்துறையிலும் காணப்படுகின்றது.

பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் இடையே மாணவர்களை வழிப்படுத்துவதிலும் மாறுபட்ட நிலைகளில் எதிர்மாறான போக்குகள் பின்பற்றப்படுகின்றன.

கடந்த காலங்களில் பாடசாலைகள் கல்வியில் வகித்துவந்த இடம் சமகாலத்தில் மாறுபட்டுச் செல்கின்றது. மாணவர்கள் மனக்குழப்பத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பரீட்சைகளுக்கூடாக மாணவர்களிடம் அறியப்படுவது அவர்களது அறிவு என்ற நிலை மாறி, மனனம் செய்வதும் சில மாதிரிகளுக்குத் தயாராவதும்தான் பரீட்சை என்ற நிலை உருவாகிவருகின்றது.

சமகால மாணவர்களின் தகுதி நிலை குறைவடைந்து வருகின்றது. பல்கலைக்கழகங்களில் சிலபாடத் துறைகளுக்கு தகுதியான மாணவர்கள் இல்லாத நிலை ஏற்பட்டிருப்பதால் பல்கலைக்கழகங்களில் சில பாடத்துறைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் உரையாற்றும் போது -

வளர்ச்சி அடைந்த நாடுகளின் கல்வித்தரம் காலத்திற்கு ஏற்புடைய முறையில் மாற்றமடைந்து செல்கின்றது. நாமும் காலத்திற்கு ஏற்புடைய முறையில் கல்வியில் மாற்றங்களைச் செய்யவேண்டும்.

மதப்பீட்டுக் கலாசாரம் மாற்றப்பட்டு கணிப்பீட்டுக் கலாசாரம் கல்வியில் ஏற்புடையது என அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இதனை ஆசிரியர்கள் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அதனை உரிய முறையில் நிறைவு செய்ய வேண்டும் - எனக் கூறினார். (ம-10-11)






சுகாதாரத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸாவும் சீன அமைச்சரும் ஒப்பந்தம் ஒன்றை பரிமாறிக் கொள்வதையும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மற்றோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதையும் படங்களில் காணலாம்.

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதினோராம் திருவிழா



## உள்ளமே அவனை எண்ணு

அற்புதம் நிகழ்த்தும் எங்கள்
அருந்தமிழ்த் தெய்வம் கந்தன்
பொற்பதம் தொழுவார் தம்மைப்
பொலிவுடன் வாழ வைப்பான்
நற்கதி அருள்வான் நல்லூர்
நாயகன் அவன் இருக்க
உற்றதோர் துணை வேறுண்டோ
உள்ளமே அவனை எண்ணு.

- கவிஞர் வ.யோகானந்தசிவம்.

## எமக்கருளாயோ

தேரடியில் தவமிருந்தோன்
தியானத்தையே ற்றவனை
பேரருட் கருணையினால்
பெரும் ஞானியாக்கினையோ
யாரழைத்து அழுதாலும்
அபய மளித் தருள்பவனே
பேரறிவை யாம் பெறவே
பேதையெமக் கருளாயோ!

- மு.க.சிவானந்தம்.

## உன் சரணம் போற்றி போற்றி!

ஐவகை நிலத்தில் ஒன்றைக் காப்பவனே உன் வேல் போற்றி
ஐயம் அற்றவனே உன் மனம் போற்றி
ஒருவனான ஆறுவனே உன் தலை போற்றி
ஒப்பற்ற ஞானம் உள்ளவனே உன் சக்தி போற்றி!

ஓம் என்ற மந்திரத்தை உபதேசித்தவனே போற்றி
ஓங்கார அடி வேலவனே உன் நாமம் போற்றி
ஔவைக்கு அருளியவனே உன் அருள் போற்றி
ஔடதமாய் பூமி காப்பவனே உன் சரணம் போற்றி போற்றி!

- சி.சிவசெந்தூரன், வேலணை

## உய்திடும் வழி அளிப்பான் முருகன்!

களமதில் இறங்கிக் கடுஞ்சமர் செய்து
கொடிய சூரனை வதமது செய்த
அழகனை அமரரைக் காத்த தலைவனை
அற்புத வேலது தாங்கிய வீரனை
பழமது பெற்றிட மயிலினில் ஏறி
பாரினைச் சுற்றிய பழனி யாண்டியை
உளமே! உருகித் தொழுதிடு! அழுதிடு!
உய்திடும் வழியை அளிப்பான் காண்பாய்!

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## இறைஞ்சி நிற்பேன் அருள்தர

நாளும் கோளும் செய்யும் நலிவில்
நானும் விலக்கு இல்லை எனினும்,
வேலும் மயிலும் போற்றி போற்றி
வெற்றி வேலா போற்றி என்று
ஏலும் வரைக்கும் உன்னை நானும்
இறைஞ்சி நிற்பேன் நல்லூர்க் கந்தா
வாழும் வாழ்வில் வரும்தீ வினைகள்
வாட்டா வண்ணம் அருள்தா எனக்கு

- முருகனடியான்.

## நற்கதியை எம்மவர்க்குத் தா

முன்னைப் பெருவினையும் மூண்ட பெரும் பகையும்
கந்தா என்று சொல்லக் கரையுதே
பின்னைப் பெருநிதியும் பேரும் புகழுமிவை
முருகா என்று சொல்லப் பெருகுதே
எம்மைப் பிடித்த மன மலகந்தையெல்லாம்
வேலா என்று சொல்லக் கெட்டழியுதே
உம்மையே கதியென நம்பினோம் நல்லையப்பனே
நற்கதியை எம்மவர்க்குத் தா.

- நயினையான்.

# உலகை அதிசயிக்க வைத்த ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள்



**தற்போதைய உலகில் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களின் உடல்களைப் பிரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும், இன்னும் பூரண வெற்றி காணமுடியவில்லை. ஆனால், சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஒட்டிப் பிறந்து வாழ்ந்த சீயம் இரட்டையர்களின் வாழ்க்கை குறித்த தொகுப்பை இங்கு தருகின்றோம்.**

ஒட்டிப் பிறந்த ஈரானிய சகோதரர்களை பிரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் தோல்வியுற்று அவர்களது வாழ்க்கை முடிவுற்றது குறித்துப் பல செய்திகள் வெளிவந்த வண்ணமிருக்கும் இவ்வேளையில், உலகில் இவ்விதம் ஒட்டிப் பிறந்து, வாழ்ந்து, மறைந்த மற்றோர் இரட்டையர் பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்விதம் உடலால் ஒட்டிப் பிறந்து வாழ்ந்த இரட்டைச் சகோதரர்கள் "சீயம் இரட்டையர்கள்" எனப் பெயரிடப்பட்டுப் பிரபல்யப்படுத்தப்பட்டனர். இந்த இரட்டைச் சகோதரர்களுடன் 'சீயம்' என முன்னர் அழைக்கப்பட்ட இன்றைய தாய்லாந்து நாடு எவ்விதம் தொடர்புபடுத்தப்பட்டதென நீங்கள் எண்ணக்கூடும். உலகில் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்த இந்த இரட்டையர்கள் முன்னர் 'சீயம்' என அழைக்கப்பட்ட தாய்லாந்து நாட்டில் பிறந்ததன் காரணமாகவே அவர்கள் அவ்வாறு அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் அமெரிக்கப் பிரஜைகளான இவ்விருவரே சாங்க் பன்கர் மற்றும் எங்க் பன்கர் ஆகியோராவர்.

தலைவிதி என்றால் என்ன? அதை எவ்விதம் தீர்மானிக்கமுடியும்? என்ற இக்கேள்விகளுக்குப் பொருத்தமான பதில் 'சாங்க்' மற்றும் 'எங்க்' ஆகியோரே எனக் கூறினால் அது தவறாகாது. 'சீயம்' நாட்டில் வறியதொரு குடும்பத்தில் ஒட்டிய நிலையில் பிறந்து, அமெரிக்காவுக்குச் சென்று உலகப் பிரசித்திபெற்ற இரடடையர்களாகி பின்னர் ஒரு சமயம் பெரும் நிலப்பரப்புக்குச் சொந்தக்காரர்கள் என்ற வகையில் தனவந்தர்களாகத் திகழ்ந்து, விவாகம் செய்து பல பிள்ளைகளுக்குத் தந்தைமாராகி, வாழ்ந்த இவ்விருவரது வாழ்க்கை வரலாறு புதுமைகள் நிரம்பியதொன்கும்.

சயம் நாடு முடியாட்சிக்கு உட்பட்டிருந்த 1811ஆம் ஆண்டில் இவர்கள் பிறந்தனர். அந்தவேளையில் நாடு பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. சமய நம்பிக்கையும், மூட நம்பிக்கையும் சமுதாயத்தில் விரவிக் காணப்பட்ட காலகட்டம் அது. அதன் காரணமாக உடலால் ஒட்டிப் பிறந்த நிலையில் அவர்களைக் கண்ட பலர் அச்சமடைந்தனர். குழந்தைகளைப் பராமரிக்கும் செவிலித்தாய்மார் எவரும் அக்குழந்தைகளின் அருகில் செல்ல விரும்பம் கொள்ளவில்லை. இராட்சதக் குழந்தைகள் பிறந்துள்ளதாகப் பொதுமக்கள் பேசிக் கொண்டார்கள். விடயமறிந்த மன்னர் அக் குழந்தைகளைக் கொன்றுவிடுமாறு உத்தரவிட்டார். ஆனால், அக்குழந்தைகளின் அதிர்ஷ்டமோ என்னவோ, அந்த உத்தரவைச் செயற்படுத்த அக் குழந்தைகளின் தாயார் அனுமதிக்கவில்லை. இதனால், அக்குழந்தைகள் உயிர் தப்பமுடிந்தது. இதனிடையே, அக்குழந்தைகளைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கு வைத்தியரொருவர் விரும்பியபோதிலும் அதற்கும் இடமளிக்கப்படவில்லை.

இவ்வாறு சகல கஷ்டங்களுக்கு மத்தியிலும், குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் துரித முன்னேற்றம் காணப்பட்டது. ஓட்டம், நீச்சல், பாய்தல் ஆகிய செயற்பாடுகளில் திறமை காட்டியமையால் அவ்விருவரும் பிறந்த வேளையில் நான்கு அங்குலம் வரை நீளம் கொண்டிருந்த அவர்களது வயிற்றுப் பகுதியில் இருந்த சதை இணைப்பு 5 1/2 அங்குலம் ஆனது. இது ஒருவகையில் அவர்களுக்கு வசதியாய் அமைந்தது. அவர்களுக்கு எட்டு வயதாக இருந்தவேளையில் அவர்களது தந்தை காலமானார். இதனால் அவர்களது பொருளாதார நிலை பாதிப்படைந்தது. சிறுவர்கள் இருவரும் தாராமுட்டை விற்றுத் தமது வாழ்க்கையை ஓட்டினர். அவ்விதம் இவர்கள் தாராமுட்டை விற்பனையில் ஈடுபட்டிருந்த வேளையில் 'றொபேட் ஹன்ரர்' என்ற பிரபல பிரித்தானிய வாத்தகரை இவர்கள் சந்திக்க நேர்ந்தது. 'சாங்க்' மற்றும் 'எங்க்' ஆகிய இச்சிறுவர்களின் தாயாரிடம் அச்சிறுவர்களின் எதிர்காலம் பற்றி எடுத்துக் கூறிய அவ்வர்த்தகர், 3000 டொலர்களுக்கு அவ்விருவரையும் விலைக்கு வாங்கிக்கொண்டார். ஆயினும், அவர்களது தாயாருக்கு கிடைத்ததோ 500 டொலர் மட்டுமே.

அதன் பின்னர் சில வருடங்கள் 'ஹன்ரர்' தனது அமெரிக்க நண்பரான கப்டன் 'அபேல் கோபி'னுடன் இணைந்து அச்சிறுவர்களைக் காட்சிக்கு வைத்து பெருந்தொகைப் பணத்தைத் தேடிக்கொண்டார். களியாட்டக் கூடங்களில் இச்சிறுவர்களைக் காட்சிக்கு நிறுத்தி வைத்ததோடு, அவர்களைக் காணச் சென்றவர்களிமிருந்து ஆளுக்கு 50 சதம் என்ற விகிதத்தில் கட்டணமும் அறவிடப்பட்டது. இவ்விதம் நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் இவர்கள் காட்சிக்கு நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு மிகக் குறைந்த நேரமே ஓய்வெடுகக முடிந்தது. இந்தவகையில் 1829ஆம் ஆண்டில் 'பொஸ்ரன்' நகரில் இடம் பெற்ற இவர்களது காட்சியைக் காண 61ஆயிரம் பொதுமக்கள் வந்தனர். அக்காட்சி வேளைகளின்போது அவ விரு சிறுவர்களும் தமது திறமையையும் வலுவையும் பார்வையாளர்களுக்கு வெளிப்படுத்தி மகிழ்வித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்காட்சிகளின்போது அவர்களுக்குப் பல தடவைகள், பலதரப்பட்ட சிரமங்கள் ஏற்பட்டதாயினும், எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. ஆயினும், அவர்களை வைத்து இக்காட்சிகளை ஒழுங்குசெய்து நடத்திய ஹன்ரரும் அவரது நண்பரும் அவ்விரு சிறுவர்களையும் நியாயமான முறையில் நடத்தவில்லை. அவர்கள் இருவரும் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், கப்டன் 'கோபின்' முதல் வகுப்பில் பிரயாணம் மேற்கொண்ட அதேசமயம் அவ்விரு சிறுவர்களும் சாதாரண தொழிலாளர்கள் பிரயாணம் செய்யும் பிரிவிலேயே பிரயாணம் செய்யவைக்கப்பட்டமையை இதற்கு ஓர் உதாரணமாகக் குறிப்பிடமுடியும் இருந்தபோதும், காலப்போக்கில் இச்சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் ஓர் ஒழுங்கில் அதிகரிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. ஆரம்பத்தில் மாதமொன்றுக்கு 10 டொலர் என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த சம்பளம், 50 டொலராக அதிகரிக்கப்பட்டு, கடைசியில் மாதமொன்றுக்கு 100 டொலர் சம்பளமாக வழங்கப்பட்டது.

அவவிருவரும் 21 வயதை அடைந்த வேளையில், அவர்கள் சுதந்திரமாக தன்னிச்சைப்படி நடந்துகொள்ளச் சந்தர்ப்பம் வாய்த்தது. அமெரிக்க கலாசாரத்தையும் மொழியையும் கற்றுக் கொள்வதற்கு பெரும் விரும்பம் கொண்டிருந்த இவர்கள் பற்றி புதினப் பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளிவரத்தொடங்கின.

ஒட்டிப் பிறந்த இச்சகோதரர்களில் 'சாங்க்' வலது புறத்தில் இருந்தார். இவர் தனது சகோதரனை விடக் குள்ளமானவர். எப்போதும் கோப சுபாவம் கொண்டவர். தனது சகோதரனைக் கட்டுப்படுத்துவதில் எப்போதும் உற்சாகம் காட்டி வந்தார். இதற்கு மாறாக 'எங்க்' அமைதியான சுபாவம் கொண்டவர். அயலில் நடப்பவற்றைத் தெரிந்து கொள்வதற்கு ஆர்வம் காட்டுபவர். இந்த இருவரின் குண இயல்புகளில் வேறுபாடுகள் இருந்தபோதும், பல விடயங்களில் ஒற்றுமைகள் காணப்பட்டன. இவ்விருவரும் எச்செயலில் ஈடுபட்ட வேளையிலும் ஒரே விதத்தில் செயலாற்றினர். இருவரது விருப்பங்களிலும் பெரும்பாலும் ஒத்த தன்மை காணப்பட்டது. பழக்கவழக்கங்களும் அவ்விதமே அமைந்திருந்தன. ஒருவரோடொருவா அதிகம் பேசிக்கொள்ளாது விடினும் இருவரது தீர்மானங்களும் ஒரே வகையில் அமைந்திருந்தன.

இருவரும் உடலமைப்பில் அபூர்வத் தன்மை கொண்டவர்களாகையால், இவர்களது குணவியல்புகளையும் நடவடிக்கைகளையும் ஆராயும் நோக்கில் இவர்களை வைத்தியர்கள் அவதானித்து வந்தனர். அதன் காரணமாக இவ்விருவரது நிலைமை தொடர்பான செய்திகள் எப்போதும் வெளிவந்த வண்ணமிருந்தன. ஒட்டிப் பிறந்த நிலையிலுள்ள இவ்விருவரையும் தனித்தனியாப் பிரிக்க இயலாதா? என்பதே பலரதும் வினாவாக இருந்தது. இக்கால கட்டத்தல் நிலவிய விஞ்ஞானத் தொழில்நுட்பத் தரப்படி அவ்விருவரையும் அவர்களது சிறுவயதிலேயே சிக்கல்கள் எதுவுமின்றி பிரிந்திருக்கலாம் எனப் பேசப்பட்டது. அத்தோடு, அமெரிக்க வைத்தியர்கள் இவ்விருவரையும் பயன்படுத்தி பலவித பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

1832ஆம் ஆண்டில் சுதந்திர புருஷர்களானதன் பின்னர் மேலும் ஏழு ஆண்டுகளாக இவ்விருவரும் இணைந்து பல நிகழ்ச்சிகளை நடத்திவந்தனர். இவ்விதம் இவர்களது வாழ்க்கை சென்றுகொண்டிருந்த நிலையில் இடைநடுவே ஒரு சமயம் இவர்களைச் சந்தித்த ஜேம்ஸ் காலோவே என்ற வைத்தியர் 'வில்கெஸ்பேரோ' என்ற இடத்துக்கு விடுமுறையைக் கழிப்பதற்காக வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அவ்விதம் அவர்கள் கழித்த அவ்விடுமுறையே அவர்களது வாழ்க்கையில் திருப்புமுனையொன்றை ஏற்படுத்தியது. சாதாரண பொது மக்கள் பலரைச் சந்திக்கமுடிந்ததோடு, அவர்கள் தமது நிகழ்ச்சிகளை நடத்தும் தொழிலைக் கைவிட்டு சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்குத் தீர்மானித்தனர். அவ்வேளையில் வட கரோலினா பிரதேசம் விவசாய அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் இருந்து வந்தது. எனவே, அவ்விருவரும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனத் தீர்மானித்தனர். அவ்வேளையில் அவர்களிடம் பெருந்தொகைப் பணம் கையில் இருந்தமையால் 1000 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு அமெரிக்கப் பிரஜா உரிமை கோரியும் விண்ணப்பித்துக் கொண்டனர். அதன் பின்னரே தமது பெயர்களுக்குப் பின்னால் 'பன்கர்' என்ற அமெரிக்கப் பெயரையும் இணைத்துக் கொண்டனர்.

அவ்விதம் விவசாய நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்த கால கட்டத்தில்தான் 'அடிலயிட்' மற்றும் 'சவி சேட்ஸ்' ஆகிய இரு சகோதரிகள் பற்றி அவர்கள் கேள்விப்பட நேர்ந்தது. முதலில் 'அடிலயிட்' மீது 'சாங்க' காதல் வயப்பட்டார். அவ்விரு சகோதரிகளில் 'அடிலயிட்' வயதில் இளையவராவார். அவ்வேளையில் அவருக்கு 17 வயதே ஆகியிருந்தது. அதன் பின்னர் 'எங்க்'க்கும் 'சலீயும்' எதிர்பாராத வித்தில் காதலர்கள் ஆயினர். ஆயினும், அவர்களது திருமணம் தொடர்பாகப் பிரச்சினை உருவாகியது பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். அப்பெண்களது பெற்றோர் இத்திருணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். திருமணத்தின் பின்னர் பலவித பிரச்சினைகள் உருவாகக்கூடுமெனப் பலரும் அபிப்பிராயப்பட்டனர். ஆனால், காதலர்கள் தாம் வாழ்க்கையில் இணைவது குறித்து கடும் உறுதிப்பாடுகொண்டிருந்ததைப் புரிந்துகொண்ட பெற்றோர்கள், அவர்களது விருப்பத்தை அனுமதித்தனர். இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணம் தாம் உடலால் ஒட்டிய நிலையிலுள்ளமையே என நினைத்து அவர்கள் தாம் தனித்தனியாகப் பிரிந்து கொள்வதெனத் தீர்மானித்தனர். இதற்காக எவரும் அறியாது 'பிலடெல்பியா' நகருக்குச் சென்ற அவர்கள் தம்மைப் பிரிப்பதற்கான சத்திரசிகிச்சைக்கு தம்மை உட்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தனர். ஆனால், சத்திர சிகிச்சைக்கான முழு ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்த கடைசி நேரத்தில் அடிலயிட்டும் சமியும் அவர்களிடம் வந்து சத்திரசிகிச்சை செய்து கொள்வதைக் கைவிடுமாறு கோரியதையடுத்து அம்முயற்சி கைவிடப்பட்டது. 1843ஆம் ஆண்டில் அவர்களது திருமணம் இடம்பெற்றது 'சாங்க்' மற்றும் 'எங்க' ஆகியோர் புதியதாக வீடொன்றை அமைத்துக் கொண்டனர். ஆயினும், ஒரு சிறிய கால இடைவெளியில், அவ்வீடு அவர்களது பாவனைக்குப் போதவில்லை. விவாகமாகி ஓராண்டு முடிவதற்குள் 'சவி' பெண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். அதன் பின்னர் ஆறு நாள்கள் கழித்து 'அடிலயிட்டும்' பெண் குழந்தையொன்றைப் பிரசவித்தாள். அதற்கடுத்த வருடத்தில் பெண்கள் இருவரும் மேலும் ஒவ்வொரு பெண் குழந்தைகளை ஈன்றெடுத்தனர். அதன் பின்னரும் அவர்கள் மேலும் சில குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். 1860 ஆம் ஆண்டளவில் 'அடி'க்கு ஏழு குழந்தைகளும் 'சவி'க்கு ஒன்பது குழந்தைகளும் இருந்தனர்.

இந்தவேளையில "அடி" ஒரே குடும்பமாக வாழ்வதை விடுத்து தனியாக வாழ முடிவுசெய்தாள். இதற்குக் காரணம் சகோதரிகள் இருவரிடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டமையேயாகும். இதன் காரணமாக அவர்களது கணவர்களான 'சாங்க்' மற்றும் 'எங்க்' ஆகியோரிடையேயும் பிணக்குகள் உருவாகின. அப்பிணக்குகள் கடைசியில் ஒருவரோடொருவர் கைகளால் அடிபட்டுக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. 'சாங்க்' பெரும்பாலும் தனது சகோதரனைக் கடுமையாகத் தாக்கி வந்தார். அத்தோடு அவர் அதிக அளவில மதுபானம் அருந்தும் பழக்கத்தையும் கொண்டிருந்தார். இருந்தபோதும் அவ்விருவரும் மற்றவருக்காக கடவுளை வேண்டிக்கொள்ள வேண்டியேற்பட்டது. அவர்களது மனைவிமார் பிரிந்து தனித்தனியாக வாழ்ந்து வந்தமையால் ஒவ்வொருவரது வீட்டிலும் மூன்று நாள்கள் வீதம் வசிப்பதெனச் சகோதரர்கள் இருவரும் தம்மிடையே இணங்கிக்கொண்டனர். அது சகோதரர்களிடையேயான இணக்கப்பாடு ஆனபோதிலும் இலேசாகக் கடைப்பிடிக்கப்படக் கூடிய வகையில் அமையவில்லை.

## வீயெஸ்ரீ

மனைவிமார் தனித்தனியே பிரிந்து வாழ ஆரம்பித்தமையால் தமது சொத்துக்களைப் பங்கு போட்டு கொள்வதென 'சாங்க்'கும் எங்க்'கும் தீர்மானித்தனர். 'சாங்க்' நிலத்தின் பெரும் பகுதியைத் தமது பங்காக எடுத்துக் கொண்டமையால் "எங்க்"இற்கு அதிக தொகையான கூலியாள்களையே தமது பங்காகப் பெற முடிந்தது. அதன் பின்னர் " எங்க்" இற்கு பொருளாதார ரீதியில் நட்டம் ஏற்படத் தொடங்கியது. நிதி தொடர்பான பிரச்சினை அதிகரித்தமையால் மீண்டும் காட்சிகளை நடத்துவதென சகோதரர்கள் இருவரும் தீர்மானித்தனர். 1849ஆம் மற்றும் 1853ஆம் ஆண்டுகளில் அவர்கள் இவ்வித விநோதக் காட்சிகளை நடத்திருந்தனர். 1860 இல் மீண்டும் அவ்வாறான விநோதக் காட்சிகளை நடத்துவதென முடிவு செய்த அவர்கள், "கலிபோர்னியா" நகருக்குச் சென்றனர். நான்கு மாதங்களாகத் தமது விநோதக் காட்சிகளை நடத்திமுடித்து, மீண்டும் தமது இடத்துக்குத் திரும்பி வந்த சமயம் வடக்கு மற்றும் தெற்கு கரோலினா மாநிலங்களில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகியிருந்தது. அதன் காரணமாக அவர்களது சொத்துக்கள் யாவும் அழிவுற்றிருந்தன. அவ்வேளையில் "சாங்க்"கிடம் 6,700 டொலர்களும் "எங்க்"கிடம் 2,600 டொலர்களும் மட்டுமே கையில் மீதமாய் இருந்தது. அதன் பின்னர் தொடர்ந்தும் ஒட்டிய உடல்களுடன் வாழ்ந்துவந்த போதும் "எங்க்" தனது சகோதரனை விட ஏழையாகவே வாழ நேர்ந்தது.

சகோதரர்கள் இருவரும் இடையிடையே விநோதக் காட்சிகளை நடத்த ஆரம்பித்தனர். ஆனால் அவற்றின் மூலம் கிடைத்த பணம் படிப்படியாகக் குறைவடைய ஆரம்பித்தது. இதனால் 1868ஆம் ஆண்டில் சகோதரர்கள் இருவரும், தத்தமது மனைவியர் மற்றும் சிறு குழந்தைகள் சகிதம் இங்கிலாந்து நோக்கிப் பயணமாகினர். அவ்வேளையில் "எங்க்" 12 பிள்ளைகளுக்கும், சாங்க் 10 பிள்ளைகளுககும் தந்தையராய் ஆகியிருந்தனர். இங்கிலாந்தில் அவர்களது விநோதக் காட்சிகள் வெற்றியளித்தமையினால், சகோதரர்கள் இருவரும் மீண்டும் தம்மைத் தனித்தனியாகப் பிரித்துக்கொள்வதற்கு முயற்சித்தனர். ஆனால், அதுவும் தோல்வியையே அளித்தது. 1870 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டுக்கும் ரஷ்ய நாட்டுக்கும் இடையே இடம் பெற்ற யுத்தம் காரணமாக சகோதரர்கள் இருவரும் மீண்டும் அமெரிக்காவுக்குத் திரும்ப நேர்ந்தது. திரும்பி வரும் வழியில் "சாங்க்"கின் உடலின் வலது பக்கம் பக்கவாதநோயால் செயலிழந்தது. அதனையடுத்து சகோதரர்களிடையே அடிக்கடி சண்டை இடம்பெறலாயிற்று. ஒருதடவை "சாங்க்" கத்தியொன்றைக் காட்டி "எங்க்"கை கொன்றுவிடுவதாகப் பயமுறுத்திய சம்பவமும் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் பின்னர் தம் இருவரையும் வெவ்வேறாகப் பிரித்துவிடுமாறு கோரி "சங்க்"கும் "எங்க்"கும் வைத்தியர் ஒருவரை நாடினார்கள். ஆனால் அவ்விதம் அவர்களை வெவ்வேறாகப் பிரிக்க முயற்சித்தால் அது அவ்விருவரின் உயிருக்கே ஆபத்தாக முடியுமென அவ்வைத்தியர் அவர்களுக்கு விளக்கி கூறியதையடுத்து அவர்களிடையேயான சண்டை தணிந்தது. இருந்தபோதும் பக்கவாதநோயினால் பாதிக்கப்பட்ட "சாங்க் " மரணமடையும் வேளையில் அவ்விருவரது ஒட்டியுள்ள உடலை பிரித்து விடுவதாக அந்த டாக்டர் "எங்க்"குக்கு உறுதியளித்தார். ஆனால், அவ் வைத்தியரின் சேவைக்கு அவசியமேற்படவில்லை.

1874ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் ஓர் இரவில் "சாங்க் பங்கர்" மரணமடைந்தார். இதைக்கண்டு "எங்க் பங்கர் " வாய் விட்டுக் கத்தினார். "இப்போதே நானும் இறந்துவிடுவேன்" இவ்வாறு பயம் மேலிடக் கத்தலானார் "எங்க் பங்கர்". இவர்களை உடல் ரீதியாகப் பிரித்துவிடுவதற்காக வைத்தியர் அங்கு வந்து சேர்வதற்கு முன்னர், அதாவது "சாங்"கின் மரணத்துக்கு சில மணித்தியால நேரம் கழித்து "எங்க்"கும் மரணமானார் "சாங்க்"கின் மரணத்துக்கான காரணம் மூளையில் இரத்தக் கட்டி ஏறபட்டதே என வைத்தியர்கள் முடிவு செய்த அதேசமயம், "எங்க்"கின் மரணம் அதீதபயத்தின் காரணமாக ஏற்பட்டதென முடிவுசெய்தனர். ஆனால், "எங்க்"கின் மரணத்துக்கான காரணம் தெளிவான வகையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஒட்டிப்பிறந்த இந்த சகோதரர்களின் இறப்புக்குப் பின்னர் அவர்கள் பற்றிப் பற்பல தகவல்கள் வெளிவநதன. ஒரு காலத்தில் உலகத்தின் எட்டாவது அதிசயமெனக் கருதப்பட்ட இச்சகோதரர்களின் மரணத்தின் பின்னர் இச்"சீயம் இரட்டையர்கள்" பற்றி பற்பல செய்திகள் வெளிவந்தன. உலகின் பணம் படைத்த இரட்டையர்களாகப் பிரபல்யம் பெற்றிருந்த இவ்விருவரும் மரணமடைந்தவேளையில் அவர்கள் ஏழைகளாகவே மரணமுற்றனர். ஆனால் இவ்விருவரும் உலகத்தை அதிசயப் படவைத்த மனிதர்களாக வாழ்ந்தனர் என்பது இரகசியமானதல்ல.

# வீடுகளில் இருந்து படையினரை வெளியேற்ற நீதிமன்றை நாடுவோம்

## மந்துவில் வீட்டு உரிமையாளர்கள் பிரதமருக்கு எச்சரிக்கை

தென்மராட்சி,ஓக.13

எமது வீடுகளில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக நாம் நீதிமன்றை நாடவுள்ளோம். அப்பொழுது எமது உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான பொறுப்பையும் நீங்கள்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மந்துவில் கிழக்கில் படையினர் நிலைகொண்டுள்ள வீடுகளின் உரிமையாளர்களால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாம் எமது வீடுகளையும் விவசாய நிலங்களையும் விட்டுவிட்டு வேறு இடங்களில் அகதிகள் என்ற பெயரில் அந்நிய மக்களின் வீடுகளில் இருந்து கொண்டு மிகவும் கஷ்டப்படுகின்றோம்.

ஆனால் படையினர் எமது வீடுகளில் தங்கியிருப்பதுடன் அவற்றைச் சேதப்படுத்தியும் வருகின்றனர். விவசாய நிலங்களையும் அவர்கள் ஆக்கிரமித்துள்ளமையால் நாம் தொழிலில் ஈடுபடமுடியாமலும் எமது பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியாமலும் உள்ளோம்.

எமது பிரச்சினைகளையும் குறைகளையும் எத்தனையோ தடவைகள் நாம் பிரதமராகிய உங்களுக்கும் மற்றும் ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்கும் கடிதங்கள் மூலம் தெரிவித்திருந்தும்கூட இதுவரையும் எங்களுக்கு எந்த விதமான முடிவும் கிடைக்கவில்லை. எமது நம்பிக்கையும் வீணாகிவிட்டது. நடைபிணங்களாக வாழும் எமக்கு நல்ல நீதி கிடைக்காதா?

2000 ஆம் ஆண்டு ஜுன் மாதம் எமது வீடுகளை ஆக்கிரமித்த படையினர் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து வீடுகளைத் தருகிறோம் என்று வாராவாரம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் இன்னும் அவற்றைத் தந்தபாடில்லை.

இதற்காக நாங்கள் உண்ணாவிரதமோ, மறியற்போராட்டமோ எந்தவித ஆர்ப்பாட்டமோ செய்யாது மன்றாட்டமாகவே தொடர்ந்தும் கேட்டுவருகிறோம்.

எனவே, இக்கடிதத்துக்குப் பின்னர் ஆயினும் எமக்கு நீதியானதொரு தீர்வைத் தருவீர்கள் என்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். அவ்வாறு நீதியான தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்பு நாம் நீதிமன்றை நாடவுள்ளோம். அவ்வாறு நீதிமன்றை நாடும் பட்சத்தில் எமது உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான பொறுப்பையும் நீங்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் நீதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு, யாழ். மாவட்ட அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர், இராணுவத் தளபதி உட்படப் பலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-10-117)

# வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒலிபெருக்கித் தொகுதி எங்கே?

கொழும்பு,ஓக.13

வடக்கு - கிழக்கு மாகாண சபை இயங்கியபோது, முதலமைச்சர் மற்றும் மாகாண அரசின் உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கெனவும் அது தொடர்பான சேவைக்கு பயன்படுத்தவெனவும் கொள்வனவு செய்யப்பட்ட ஒலிபெருக்கிச் சாதனத் தொகுதி எங்கே என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒலிவாங்கி, ஒலிபெருக்கி, ஒலிப் பதிவுக்கருவி, அம்பிலிபயர் கருவி இவற்றோடு தொடர்புடைய சாதனங்கள் பற்றியே இப்போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இவற்றின் அப்போதைய பெறுமதி சுமார் 5 லட்சம் ரூபா எனக் கூறப்படுகின்றது.

இது பற்றி யாரும் கேட்டால் ஏதாவது ஓர் இயக்கத்தின் தலையில் பழியைப் போட்டார்கள். இதனால், அப்போது எதுவும் செய்யமுடியவில்லை.

இப்போது எல்லா இயக்கங்களும் நகரில் இயங்குகின்றன. எனவே, விசாரித்து தெரிந்துகொள்ளலாம்தானே என்று மக்கள் கூறுகின்றனர்.



ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்தின் சேவையைப் பாராட்டி காரைநகர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவின்போது காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வாநயகத்திற்கு பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் படத்தில் காணலாம். (ஒ-73)

# ஓர் இனம் இன்னோர் இனத்தினை அடக்குவது அங்கீகரிக்க முடியாதது

## எதிர்க் கட்சித் தலைவர் கூறுகிறார்



மாத்தறை,ஓக.12

தேசிய வாதம் என்பது இனவாதமலல. இனவாதம் நாட்டின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாகும். ஓர் இனம் மற்றோர் இனத்தை அடக்கியொடுக்குவதையும், அடித்துக் கொலை செய்வதையும் எந்த சமயமும் அங்கீகரிக்க முடியாது. 1983 கறுப்பு ஜுலைச் சம்பவங்களே இன்று இந்த நாடு சமூக, அரசியல், பொருளாதார துறைகளில் பின்னடைவதற்கு காரணமாகும்.

அதன் பிரதிபலனையே, நாம் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறன சம்பவங்கள் இனிமேலும் இந்த நாட்டில் இடம்பெற இடமளிக்கக்கூடாது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

அக்குரஸ்ஸ அல்கிரிய புராண ரஜமஹா விகாரையில் அண்மையில் நடைபெற்ற சமய வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எல்லா மதங்களும் மக்களை நல்வழியில் இட்டுச்செல்லவே போதனைகள் நடத்துகின்றன. எந்த மதமும் இனவாதத்தை ஆதரிப்பதில்லை. நாம் உண்மையான பௌத்தர்களாக இருப்போமேயானால் ஏனைய இன மக்கள் மீது கருணையுடனும் சமாதானமாகவும் வாழவேண்டும்.

இன்று சில மதவாதிகள் பணத்தை அள்ளி வீசி தம் மதத்தின் பக்கம் வேற்று மதத்தினர்களை திருப்பிக் கொள்ள முனைகின்றனர்.

பௌத்தர்களும் இந்துக்களும் இந்த மதவாதிகளிடம் சிக்குகின்றனர்.

மககளின் ஏழ்மையைப் பயன்படுத்தி அவர்களுக்கு பணத்தை அள்ளிவீசி இந்த மதமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

மத சுதந்திரம் எமது நாட்டில் உண்டு. பௌத்த மதம் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்காது. எல்லா சமயங்களையும் நாம் நேசிக்கவேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

தென்மாகாண முதலமைச்சர் ஏச்.ஜி.சிறிசேன, தென்மாகாண சபை உறுப்பினர் ஆரியபுளேகொட, மாத்தறை மாவட்டச் செயலாளர் ஜி.எஸ்.எதிரிவீர, சங்கொட மானே தம்மகீர்தி உட்பட பலர் அங்கு உரை நிகழ்த்தினர்.

# வன்னி கிராமப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

## கல்வியமைச்சருக்கு அடைக்கலநாதன் கடிதம்



ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்திக்க ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது குறித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அடைக்கலநாதன் கல்வி அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டுவந் திருக்கின்றார்.

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டுமென்ற நோக்கில் 23-07-2003 திகதிய 8/6/01(8) இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. இதற்கமைய ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சை சித்தியடைந்து ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் D அல்லது ஜி.ச.ஈ. (உ/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் C பெற்றுக்கொண்ட ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு 01.08.2003இல் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

05.05.2002இல் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமையில் நடந்தேறிய நடமாடும் சேவையிலும் இவ்விடயம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

1,000 ஆசிரியர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும்போது இந்த ஆங்கில ஆசிரியர் நியமனங்களும் உள்ளடக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், நேர்முகப் பரீட்சை நடைபெற்று இரண்டு வருடங்கள் ஆன பிற்பாடும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆங்கில பாடத்தைப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு கூடிய கவனம் எடுக்கப்படுமெனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிற்பாடு நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் ஒரு சில பட்டினப் பாடசாலைகளைத் தவிர தேசிய பாஷைகளுக்கு மாற்றப்பட்டதனால்தான் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நாட்டில் ஏற்பட்டதற்குக் காரணியாய் அமைந்தது.

வன்னித் தொகுதியின் கிராமங்களில் ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் கூட சித்திபெற்றவர்களாகக் காண்பது அரிதாகும். தற்போது ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாகப் பணி புரிபவர்கள் வேறு வேலை தேடிச் சென்றுவிட்டால் அதன் பிற்பாடு வன்னித் தொகுதி கிராமியப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க எந்த நபரும் இருக்கமாட்டார்கள் என்ற நிலையே ஏற்படும்.

ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கி ஆங்கில ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு அடைக்கலநாதன் எம்.பி. கல்வி அமைச்சரிடம் கோரியிருக்கிறார். (ம)

# தமிழர் தாயகத்தில் சுதந்திரமாக நடமாடுவதையே விரும்புகிறோம்

## நூல் அறிமுக விழாவில் புதுவை இரத்தினதுரை



நாங்கள் ஈழம் கேட்கின்றோம் என்று சிலர் பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒன்றுமில்லை. காங்கேசன்துறை முதல் குமணக்கரை வரை சுதந்திரமாக நடமாடவேண்டும் என்றுதான் நாம் கூறுகின்றோம். அவை தொன்றுதொட்டுத் தமிழர் பிரதேசம். அதை நாம் கேட்பது தவறா?

- இவ்வாறு உலைக்களம் நூல் அறிமுக விழாவில் கவிஞர் புதுவை இரத்தினதுரை கேள்வி எழுப்பினார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் (வியாசன்) உலைக்களம் கவிதைத் தொகுதி அறிமுகவிழா 10ஆம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு சட்டத்தரணி கா.சிவபாலன் தலைமை தாங்கினார்.

கே.ஆர்.சிவலிங்கத்தின் ஈகச்சுடரை அடுத்து விழாச்சுடர் ஏற்றப்பட்டது. சமூகசேவகன் காந்திஐயா, பண்டிதர் இ.வடிவேல், திருமதி ராணி சீதரன், ஆர்.சி.குணரெட்ணம் ஆகியோர் விழாச்சுடர் ஏற்றினர்.

க.சந்திரகுமாரி வரவேற்புரை நிகழ்த்தினர். ராஜதர்மராஜா சிறப்புரையும், ஆ.யதீந்திரா அறிமுக உரையும் ஆற்றினர்.

புதுவை இரத்தினதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எனது கவிதையின் முதல் வாசகன் எமது தேசியத் தலைவரே. அதனால் படைப்புகள் நெறிபிறழாது பிரசவிக்கப்படும். எனது கவிதைகள் தமிழனின் வலியை பெரும்பான்மை சமூகம் புரியவைக்கும் காரணியாக இருந்தால் போதுமானது.

எம்மீது யாரும் அனுதாபப்படுகின்றார்கள் என்றால் அது கூட ஆபத்தானதுதான், ஆகவே நாம் கவனமாக இருக்கவேண்டும்.

வரலாற்றுத் தவறும் நியாயமும் சுட்டிக்காட்டப்படவேண்டும். எட்டப்பன் கூட்டம் இனங்காட்டப்பட வேண்டும். குறியீடாகவேயன்றி நேரடியாகவே குறிப்பிடவேண்டும்.

போர்க்கால இலக்கியம் வேறு, போர் இலக்கியம் வேறு. முதலாவது எங்கிருந்து கொண்டும் எழுதமுடியும். மற்றையது களத்தில் இருந்துதான் பிரசவிக்கவேண்டும்.

கவிதை படைத்தவன் சாதனையாளன் இல்லை. கரும்புலிகளே சாதனையாளர்கள்.

துன்பம், கஷ்டம் அனைத்தும் உணர்ந்தவர்கள் புலிகளே. எனவே, யுத்தம் என்பதைவிட நிரந்தர சமாதானத்தையே அவர்கள் விரும்புகின்றனர். கொடுத்த விலைக்கு அது பிராயச்சித்தமாக இருக்கவேண்டும். இந்திய அமைதி காக்கும் படையினர் இருந்த காலத்தில் பத்தாயிரம் தமிழ் நாட்டு தமிழ் படையினர் இருந்தனர். அவர்களைக் கூட நாம் அனுமதிக்கவில்லை. வேற்று இனம், வேற்று நாட்டவன் எமக்கு வேண்டாம் எம்மை நாமே ஆள்வோம். - இவ்வாறு புதுவை இரத்தினதுரை கூறினார்.

# போக்குவரத்துக்கு இடைஞ்சலான தடைகள் மண்டைதீவில் நீக்கம்

## திங்களன்று வீதியோரங்களில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஓக.13

மண்டைதீவுக் கிராமத்தின் பிரதான வீதியில், போக்குவரத்துக்கு இடையூறாக வளர்ந்திருந்த மரக்கிளைகள் மற்றும் முட்புதர்கள் என்பன சிரமதானம் மூலம் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை அவ்வூர் கிராம அலுவலர்கள், பொது சனத்தொடர்பு அதிகாரி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பெருமளவில் பொதுமக்களும், பாதுகாப்புத் தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்த பின் இதுவரை மீளக்குடியமராத வீதியோரக் காணிச் சொந்தக்காரரின் வேலிக் கதியால்களின் கிளைகள் நீண்ட காலமாக அகற்றப்படாததால் இவை வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்தன.

'நிகினி' போயா தினத்தை முன்னிட்டே இந்த சிரமதானம் ஒழுங்கு செய்யப்பட்டதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

மண்டைதீவு சித்திவிநாயகர் ஆலய இந்துஇளைஞர் மன்றத்தினர் மண்டைதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தை சிரமதானம் மூலம் மட்டப்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பகுதியில் அண்மையில் புனரமைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் இந்த மைதானத்தில், இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ம-88)




சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

இரு தசாப்தங்களாக துயரம் கண்ட நம் பிள்ளைகள் இன்று சமாதானம் கண்டு புன்னகைக்கின்றனர். இந்நிலையை நாம் நிரந்தரமாக்குவோம் என அவர்கள் நம்புகின்றனர். சமாதானத்தை முன்னெடுக்க உறுதி எடுத்துப் பாடுபடுவோம். ஒத்திவைக்காது ஒன்றுபட்டு அதனை அடைய ஒத்துழைப்போம். அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka



பங்குகள் மூலம் திரட்டல்



உங்கள் வெற்றிக்கு எங்கள் பங்களிப்பு

மேலதிக விபரங்களுக்கு விபர மஞ்சரியை பார்க்கவும். அருகிலுள்ள செலான் வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்

செலான் வங்கி

விரைவில் வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளின் வழங்கல்

# இங்கிலாந்து அணி தோல்விக்கு பயிற்றுநர் பிளட்சரே காரணம்!

## போய்கொட் கருத்து

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சமீபத்திய மோசமான ஆட்டங்களுக்கும், தோல்விகளுக்கும் பயிற்றுநர் டங்கன் பிளட்சரே முக்கிய காரணம் என முன்னாள் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் போய்கொட் தெரிவித்துள்ளார்.

போய்கொட் கடந்த ஒரு வருடமாக வாய் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். உலகக் கிண்ணம் போன்ற முக்கிய போட்டிகளில் கூட இவரால் வர்ணனை செய்யமுடியாத நிலை, பேச மிகவும் சிரமப்பட்டு வந்தார். தற்போது நீண்ட இடைவேளைக்குப் பிறகு வாய்திறந்துள்ளார். தென்னாபிரிக்க அணி கடந்த 2 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்துடன் மோசமாக விளையாடியது. அதிலும் இரண்டாவது டெஸ்ட்டில் ஓர் இன்னிங்ஸ் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. பொறுத்துப் பார்த்த போய்கொட் பொங்கி எழுத்துவிட்டார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணியின் செயற்பாடுகள் குறித்து லண்டனில் இருந்து வெளியாகும் 'தி டெய்லி டெலிகிராப்' பத்திரிகையில் பயிற்றுநர் பிளட்சரை கடும் விமர்சனம் செய்துள்ளார்.

"இங்கிலாந்து அணியில் உள்ள வீரர்களைப் பயன்படுத்தும் விதமோ பயிற்சியாளர் டங்கன் பிளட்சருக்கு தெரியவில்லை. அன்டர்சனை கவுண்டி போட்டிகளில் பங்கேற்கவிடாமல் இருந்து வருகிறார். இதனால் முக்கிய போட்டிகளில் அன்டர்சனால் பிரகாசிக்க முடியவில்லை. அனுபவமில்லாத வீரர் ஒருவரை பயன்படுத்தும் முறை பிளட்சருக்குத் தெரியவில்லை.

டெஸ்ட் போட்டிகளை வைத்துத் தான் மக்கள் கிரிக்கெட்டின் தரத்தை அறிகிறார்கள். எனவே, சில அனுபவமிக்க வீரர்களுக்கு ஓய்வு தந்து விட்டு இளம் வீரர்களைக் கவுண்டி போட்டிகளில் பங்கேற்கச் செய்யலாம்" - என்றார்.

# அ∴ப்ரோ-ஆசிய போட்டிகளில் இலங்கை மெய்வல்லுநர்கள்

இவ்வருட இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள அ∴ப்ரோ - ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கையின் முன்னணி மெய்வல்லுநர்கள் பலர் பங்குபற்றவுள்ளனர்.

சுசந்திகா ஜயசிங்க, ஸ்ரீயானி குலவன்ஸ, தமயந்தி தர்ஷா, ரொஹான் பிரதீப்குமார, ஈட்டிஎறிதல் வீராங்கனை ஆன்மஹேஷி மற்றும் ஆண்களுக்கான 4x400 மீற்றர் அஞ்சலோட்டக் குழுவினர் ஆகியோர் இப்போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டிகள் ஹைதராபாத் நகரில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த முன்னணி மெய்வல்லுநர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். சுமார் 90 நாடுகள் இதில் பங்குபற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2001ஆம் ஆண்டு புதுடில்லியில் இப்போட்டிகளை நடத்த முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் வாஷிங்ரன், நியூயோர்க் நகரங்கள மீதான தாக்குதல்களை அடுத்து இப்போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன.

இதேவேளை -

செப்ரெம்பர் 28ஆம் திகதி கொரியாவில் நடைபெறவுள்ள கிராண்ட் பறீ போட்டியொன்றில் பங்குபற்றுமாறு இலங்கை வீராங்கனைகளான சுசந்திகா ஜயசிங்க, ஸ்ரீயானி குலவன்ஸ ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக சுசந்திகாவுக்கு 2,000 அமெரிக்க டொலர்களும் (சுமார் 2லட்சம் ரூபா), ஸ்ரீயானிக்கு 1,000 டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

# சோதனையை எதிர்கொள்ளத் தயாரா? வோர்னுக்கு தென்னாபிரிக்க பெண் சவால்

தொலைபேசி மூலம் ஆபாச அழைப்பு விடுத்தார் என்று ஷேன் வோர்ன் மீது குற்றம் சுமத்திய தென்னாபிரிக்க பெண், தனது குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

3 பிள்ளைகளின் தாயான ஹெலன் கோஹெறன் அலோன் எனும் 45 வயதுப் பெண், தனக்கு ஷேன்வோர்ன் 40இற்கும் மேற்பட்ட தடவை தொலைபேசி மூலம் ஆபாச அழைப்பு விடுத்தார் என குற்றம் சுமத்தியுள்ளார். ஞாயிறன்று தென்னாபிரிக்க பத்திரிகையொன்றில் இக்குற்றச்சாட்டு வெளியானது.

இது தொடர்பாக ஷேன் வோர்னும் அவரின் சகோதரரும் கூட்டாக விடுத்த அறிக்கையொன்றில் "இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்துக்கூற விரும்பவில்லை. நாம் சட்டத்தரணிகளின் உதவியை நாடியுள்ளோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய தொலைக்காட்சியொன்றுக்கு நேற்று கோஹெறன் அலோன் அளித்த பேட்டியில் ஷேன்வோர்னுக்கு சவால் விடுத்துள்ளார்.

"மேற்படி விடயங்களை ஷேன் வோர்ன் மறுப்பாரானால், பொய்கூறுவதைக் கண்டறிவதற்கான 'லை டிரெக்ரர்' சோதனைக்கு அவரை உட்படுத்த விரும்புகின்றேன். நான் இத்தகைய சோதனையை எதிர்கொள்ளத் தயார். ஷேன் வோர்ன் இச்சோதனையை எதிர்கொள்ளத்தயாரா? என்றார்.

இந்த விவகாரத்தை அம்பலமாக்காதிருப்பதற்காக ஷேன்வோர்னின் தென்னாபிரிக்க நண்பரான கெவின் வரேஜஸ் சுமார் 28 லட்ச ரூபா வழங்க முன்வந்தார். ஆனால், அத்தொகையில் அரைப் பங்கு மட்டுமே எனக்குத் தரப்பட்டது.

"சில மர்மத் தொலைபேசி அழைப்புக்களைத் தொடர்ந்து இவ்விடயத்தை - இவ்விவகாரத்தை - பகிரங்கமாக்குவதற்குத் தீர்மானித்தேன்."

- இவ்வாறு அலோன் மேலும் கூறியுள்ளார். எனினும், வரேஜஸ் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

# 'ஷேன் வோர்னின் நடவடிக்கையால் ஆஸி. அணியின் புகழுக்கு பங்கம்'

## அவரது வரலாறு எழுதிய ஆசிரியர் தெரிவிப்பு

"ஷேன் வோர்ன் மீதான புதிய குற்றச்சாட்டுக்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் புகழுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்."

- இவ்வாறு ஷேன் வோர்னின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ரோலண்ட் பெரி கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், "இச்சம்பவம் உலகெங்கும் தலைப்புச் செய்திகளாக வெளிவரும். ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் புகழுக்கு இச்சம்பவம் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். இது 'கிரிக்கெட் ஆஸ்திரேலியா'வுக்கும் ஆஸ்திரேலிய வீரர்களுக்கும் கவலையளிக்கும் விடயமாகும்.

"குறிப்பாக ஸ்ரீவ்வோ, ரிக்கி பொன்ரிங், அடம் கில்கிறிஸ்ட் ஆகியோர இவ்விடயத்தில் மகிழ்ச்சியடையமாட்டார்கள்" - என்றார்.

இரு வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் தாதியொருவருடன் தொலைபேசியில் ஆபாசமாக பேசியமையால் உபதலைவர் பதவியை இழந்தவர் ஷேன் வோர்ன். இது குறித்து ரோலண்ட் பெரி கூறுகையில்,

"அவர் இப்பிரச்சினைகளிலிருந்து மீண்டு வருவார் என எதிர்பார்த்தேன். ஆனால், புதிய குற்றச்சாட்டு காரணமாக இனியும் அவர் அழுத்தத்திற்குள்ளாவார்.

"ஆனால், மேற்படி பெண் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டிருந்தால் ஏன் பொலீஸில் புகாரிடவில்லை என்ற கேள்வி எழுகிறது. அவர் பத்திரிகை ஒன்றிடந்தான் தனது புகாரைத் தெரிவித்தார்.

"ஷேன் இவ்விடயத்தில் தவறு செய்யவில்லை என்று நான் கூறவில்லை. ஆனால், இருவருமே சமமாக குற்றஞசாட்டப்படத்தக்கவர்கள்" - என்றார்.

(ம)

## உதைபந்தாட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (ம-86)

# இவ்வருடம் போட்டியிடமாட்டேன்; லெனொக்ஸ் லூயிஸ் கூறுகிறார்

இவ்வருடம் நான் போட்டிகளில் பங்குபற்றப் போவதில்லை என உலக அதிபார குத்துச் சண்டை சம்பியனான லெனொக்ஸ் லூயிஸ் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு

இறுதியாக கடந்த ஜூன் மாதம் விட்டாலி கிளிட்ஸ்கோவுடன் போட்டியிட்டு வெற்றியீட்டினார் லூயிஸ்.

இவ்விருவரும் எதிர்வரும் நவம்பர் மாதம் மீண்டும் மோதுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அடுத்தவருடம்வரை தான் போட்டிகளில் பங்குபற்றப்போவதில்லை என லூயிஸ் தற்போது கூறுகிறார். எனினும், குத்துச்சண்டையிலிருந்து ஓய்வுபெறுவது குறித்து தான் இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் 37 வயதான லூயிஸ் கூறினார்.

"போட்டிகளில் பங்குபற்ற எண்ணினால், அது அடுத்த வருடம் நடைபெறக் கூடும். எனது உடல்நிலையைப் பேணுவதில் எனக்குப் பிரச்சினையில்லை. 3 மாதங்களில் நான் போட்டிக்குத் தயாராகி விடுவேன்" - என்றார்.

(ம)

# போலகன் சம்பியன்: ஆனந்த் 2ஆவது இடம்

ஸ்பார்க்கசன் செஸ் தொடரில் மோல்டோவாவின் விக்டர் போலகன் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இந்தியாவின் ஆனந்த், ரஷ்யாவின் கிராம்னிக்குடன் இணைந்து 2ஆவது இடம்பெற்றார்.


ஜேர்மனியில் உள்ள டார்ட்மன்ட் நகரில் ஸ்பார்க்கசன் செஸ் போட்டி நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த கடைசிச் சுற்றுப் போட்டியில் மோல்டோவாவின் போலகன், ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக் இடையேயான கடைசி சுற்றுப் போட்டி சமநிலையில் முடிந்தது. இதன்மூலம் போலகன் 6.5 புள்ளிகளுடன் முதலாவதாக வந்து சம்பியன் பட்டம் வென்றார். இந்தியாவின் ஆனந்த், அசர்பைஜான் நாட்டின் ராட்ஜபோவ் இடையேயான கடைசி சுற்றுப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஆனந்த், கிராம்னிக்குடன் இணைந்து 5.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றார். ஆனந்த் 10 சுற்றுக்களில் 3 வெற்றி, 2 தோல்வி, 5 சமநிலை மூலம் 5.5 புள்ளிகள் பெற்றார்.

போலகன் மொஸ்கோவில் நடந்த 'ஏரோப்ளாட்' செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தத் தொடருக்கு தகுதி பெற்றிருந்தார். இந்தத் தொடரில் போலகன் முதல் பாதியில் 5 சுற்றுக்களில் 4 வெற்றி பெற்று வலுவான முன்னிலை பெற்றிருந்தார்.

இவர் ஆனந்திடம் மட்டுமே தோல்வி அடைந்தார். அடுத்த பாதியில் போலகன் விளையாடிய 5 சுற்றுக்களும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

# இன்றும் மணலில் அமர்ந்து கல்வி கற்கும் மிருசுவில் பாடசாலை மாணவர் அவலம்

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட - மிருசுவில் அ.த.க பாடசாலை எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் இயங்கி



வருகின்றது.

தரம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெறும் இப்பாடசாலையில் 304 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு மாணவர்களுக்கான அடிப்படைத் தளபாடங்களான மேசை, கதிரைகள் கூட இல்லாத நிலையில் மாணவர்கள் தரையில் இருந்து கல்வி கற்கும் அவலம் தொடர்கதையாகின்றது.

ஆசிரியர்களுக்கு வேண்டிய மேசை, கதிரைகள், கரும்பலகைக்கான - ஸ்ராண்டுகளும் இல்லை. கரும்பலகைகள் மேடையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டே கற்பித்தல் நடத்தப்படுகின்றது.

யாழ்.நகரில் சில பாடசாலைகள் ஏஸியுடன் கூடிய வசதிகளைப் பெற்ற நிலையிலும் இங்கு கால்கள் புதையும் மணலில் இருந்து மாணவர்கள் கல்வியைப் பெறும் அவலம் தொடர்கிறது.

தரம் 9, தரம் 10 மாணவர்கள் இருப்பதற்கான கதிரைகள் இல்லாத

## அதிகாரிகள், அமைப்புகள் பாராமுகம் எனக் குறைப்படுகின்றனர் பெற்றோர்

நிலையால் - மேசைகளில் இருந்தே கல்வியைப் பெறும் அவலத்தையும் இங்கு காணலாம்.

இப்பாடசாலைக்கு அரசசார்பற்ற நிறுவனங்களோ அல்லது அரச திணைக்களங்களோ எவ்வித உதவி




யும் வழங்கவில்லை எனவும் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையில் கல்வி கற்கும் கிராமப்புற - வசதி குறைந்த - மாணவர்கள் பல இடரின் மத்தியில் கல்வி கற்கும் அவலத்தை இங்கு நேரில் காணலாம்.

கற்கும் மாணவர்களில் 30 வீத மானவர்கள் போஷாக்கு குறைந்த நிலையில் இருப்பதாகவும் பலர் காலை உணவு கூட உண்ணாது பாடசாலைக்கு சமுகமளிப்பதாகவும் அதிபர் எஸ்.சடாச்சரமும், ஆசிரியர்களும் தெரிவிக்கின்றனர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட அரச திணைக்களங்கள் வழங்கும் உதவிகள் யாவும் - இப்பின்தங்கிய மாணவர்களுக்கு சென்றடைவதில்லையெனவும் - அரச அதிகாரிகள் இப்பாடசாலைப் பகுதிக்கு வருவதில்லை எனவும் பெற்றோர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்.

"இதனால் எமது பிள்ளைகளின் கலவிச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு பின்தள்ளப்படுகின்றது. எனவே எமது பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு மாற்றவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாம் தள்ளப்படுகின்றோம். ஆனாலும், எமது பொருளாதாரப் பற்றாக்குறையால் நீண்டதூரத்திற்கு எமது குழந்தைகளை அனுப்பி கல்வி பெறவைக்க எம்மால் முடியவில்லை" - என்று ஆதங்கப்படுகின்றனர் அந்த ஏழைப் பெற்றோர். (ம-31)

# நல்லூரில் ஆலய உள்வீதியில் திருட்டு

வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுடைய கடவுச் சீட்டுக்கள் மற்றும் கடனட்டைகள் என்பன நேற்றையதினம் நல்லூர் ஆலய உள் வீதியில் திருடப்பட்டுள்ளன.

இவர்கள் வைத்திருந்த தோற்பையை நைசாகத் திறந்து மேற்படி பொருள்கள் அபகரிக்கப்பட்டதாக நல்லூர் ஆலய வீதியில் உள்ள சிறப்புச் செயலணி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அர்ச்சனைச் சீட்டுப் பெறும் இடத்திலேயே தொடர்ச்சியாக பெண்கள் பகுதியில் திருட்டுக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-86)

# தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரைகள் ஓக. 18 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் சகல விரிவுரைகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார்.

மாலை நேர வகுப்புக்கள், கிழமை நாள் வகுப்புக்கள் மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் வகுப்புக்களில் கல்வி கற்போர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் தமது வகுப்புக்களுக்குச் சமுகமளித்தல்வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,ஒக.13

வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் மூன்றாமாண்டு நினைவுப் பேருரை எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நல்லூர் சிவன கோயிலில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சைவ வாழ்வியலில் கந்தபுராணம்' என்னும் பொருளில் யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் உரைநிகழ்த்துவார். (ம-8)

## பரிசுத்த ஆவிக்குரிய வல்லமை நிறைந்த செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செயதோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே!

என்வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணங்கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 நாள்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச்செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓர் அடியாள்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி! (21350)(21-11-19)

## யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்க
## வருடாந்த பொதுக்கூட்டம் - 2003

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 23.08.2003 சனிக்கிழமை மு.ப.9.00 மணிக்கு (புதிய நேரம்) சங்கத் தலைவர் திரு.ச.யோகராசா அவர்களின் தலைமையில் வித்தியாலய மேல்மாடி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் இக்கூட்டத்திற்கு தவறாது பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் இச்சங்கத்தின் வளர்ச்சி கருதி பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தவர்களாக சேரும் வண்ணமும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

ச.யோகராசா
தலைவர்.

திருமதி வி.இராசநாயகம
செயலாளர்.

(21352)(21-11-19)

## அஞ்சலி

எமது கல்லூரியின் சிற்றூழியரான கா.பஞ்சலிங்கம் அவர்களது அன்புத் தந்தையார் அமரர் **திரு.கறுத்தான் காசியன்** அவர்கள் 11.08.2003 அன்று இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சக ஊழியர்கள்.

(21351) (21-24-11-14)

## காணவில்லை

சண்டிலிப்பாயைச் சேர்ந்த **குணரட்ணம் ஜெயப்பிரகாஷ்** (குமரன்) என்ற யாழ். இந்துக்கல்லூரி மாணவனை கடந்த 9.8.2003 சனிக்கிழமை மாலை முதல் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தரவும்.

இவரின் தாயார் சுகவீனமுற்றிருப்பதால் எங்கிருந்தாலும் உடனே வீட்டுக்கு வருமாறு அன்புடன் கேட்கப்படுகின்றார்.

தொடர்பு:

சின்னத்தம்பி குணரட்ணம் (தந்தை)
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

(21-11-19) (21347)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
01 - 07 - 1932



உதிர்வு
14 - 07 - 2003

திருமதி
### கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி

பாசத்தின் திருவுருவே பண்பின் உறைவிடமே
சொந்தங்கள் நாம் இங்கே சேர்ந்து நிற்கையிலே
பாசபந்தங்களை துறந்து பரமனடி சென்றீரகளே
எங்கு சென்றிடினும் எமை துணையாக அழைக்கும் தாயே
சொர்க்கவாசல் செல்லும் போது தனியாக சென்றதேனோ?
உங்கள் உறவுகள் அங்கிருக்கும் மிடுக்குடனா?
நீங்கள் எமைவிட்டு அமைதியாக சென்றீர்கள்
நிச்சயம் மீண்டும் உங்கள் உறவுகளின் கருவில்
வந்துதிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

எங்கள் குலவிளக்கின் ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திப்பதோடு இன்று (13.08.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்
க. மகேந்திரராஜா

கட்டுடைவளவு,
மானிப்பாய்.

(21353) (21-11-14-26)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகப பணியாற்றுவோரின் சேவைக்காலத் தரவுகள் திரட்டப்படவுள்ளன.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரும் தமது சேவைக்கால தரவுகள சகிதம் நாளை மறுதினம் பி.ப. 1.30 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள உயர்கல்வி நிலையத்துக்கு வருகை தருமாறு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ம-10)

## கலந்துரையாடல்

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் பி.ப3மணிக்கு நீர்வேலி அத தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

## வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம்
### அச்சுவேலி
## முக்கிய அறிவித்தல்
### பங்குமீது வட்டி பங்குடன் சேர்த்தல்

மேற்படி சங்கத்தில் அங்கத்துவப் பணமாக ரூபா 100/-வும், அதற்கு மேலும் செலுத்திய அங்கத்தவர்களுக்கு பங்குமீது வட்டி சேர்த்துக்கொள்ளப்படும். எமது சங்கத்தால வழங்கப்பட்ட அங்கத்தவர் பேரேட்டுப் புத்தகத்தில் எமது கிராமிய வங்கியூடாகப் பதிவுகள் மேற்கொள்ளப பட்டு வருகிறது. புத்தகத்தைத் தவறவிட்டவர்கள் புதிய புத்தகத்தைப் பெற்று பதிவுசெய்துகொள்ளலாம் என்பதை அறியத்தருகிறோம்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்.

(சி-29469) (21-26-11-19)

## கோப்பாய் லயன்ஸ் கழகம்

We Serve

### நடத்தும்

### தேசிய கல்வியியற் கல்லூரிகளின் அனுமதி - 2004 கற்கை நெறிகளைத் தெரிவுசெய்வதற்கான ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான கருத்தரங்கு.

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் எமது மாணவர்களுக்கு கற்கை நெறியைத் தெரிவுசெய்தல் தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவாக்கும் நோக்குடன் கோப்பாய் லயன்ஸ் கழகத்தினால் கல்வி வலயங்கள் ரீதியாக கருத்தரங்குகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கால நேரத்தில் விண்ணப்பதாரிகள் தங்களுக்கு வசதியான இடங்களுக்கு வருகைதந்து தெளிவுகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| வலயம் | இடம் | காலம் |
|---|---|---|
| தீவகம் | யா/வைத்தியலிங்கம் துரைச்சாமி ம.ம.வி. | 16.08.2003 9.00 மு.ப. |
| யாழ்ப்பாணம் | யா/இந்துக் கல்லூரி | 16.08.2003 11.30 மு.ப. |
| வலிகாமம் | யா/இராமநாதன் கல்லூரி | 16.08.2003 1.00 பி.ப. |
| வடமராட்சி | யா/மத்திய மகளிர் கல்லூரி | 17.08.2003 9.00 மு.ப. |
| தென்மராட்சி | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 17.08.2003 11.00 மு.ப. |

மேற்படி கருத்தரங்குகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியும் கல்வியாளர்களும் கலந்துகொள்வர்.

விண்ணப்பதாரிகளைக் கலந்து பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

லயன் டாக்டர் வை.தியாகராசா
(செயற்திட்ட இணைப்பாளர்)

லயன் S.கங்காதரன்
(செயலாளர்)

விளம்பர அனுசரணை

**BATA** *மொத்த விற்பனையாளர்*
லக்ஸ்மி நிறுவனம்
இல.253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P 021 - 222 3776

(சி-29473) (21-24-14-11)


## கூரை அமைப்பில் புதிய அலை
# அன்டன் சுபர் ஷெல்டா
குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுபர் ஷெல்டா
- 25 மி.மி. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையூறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

நீடித்த பாவனைக்கு பொருத்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள். இதனை விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள மறவாதீர்கள்.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ஃபெக்ஸ்: 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

**STUDY B.Eng IN INDIA**
**ADMISSIONS 2003 - 04**
**VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES**

(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University- Chennai)
Paiyanoor, Chennai. TAMIL NADU
www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V.INSTITUTE OF TECHNOLOGY (A.V.I.T)
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
B.E Degree (4 years)
Electronics & Communication Engg. (ECE)
Mechanical Engg. (Mech.)
Electrical & Electronics Engg. (EEE)
Computer Science & Engg. (CSE)

Eligibility: Maths, Physics, & Chemistry at GCE A' Level

Contact for more details: -

NN EDUCONSULT
181/1 W A Silva Mawatha,
Colombo – 6

Telephone:075 55 88 44
E mail:nnimpex@sltnct.lk

SPOT ADMISSIONS ON 16th & 17th August for Sri Lankan Students


# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் திரு.க.நித்தியானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார் 11.08.2003 திங்கட்கிழமை காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

(C29480) (32-19-12-29)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்
*கட்டடப் பொருள்கள் வழங்குவதற்கான கேள்வி கோரல்*

யாழ். மாவட்டச் செயலக ஒரு தொகுதிக் கட்டடத் திருத்தம் செய்வதற்குத் தேவையான சீமெந்து, சல்லி, மணல், மரப்பலகை, கம்பி, யானைமார்க் கூரைத் தகடுகள், குளியல் அறைப் பொருள்கள், சுவர் ஓடுகள் போன்ற கட்டடப் பொருள்களுக்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தினையும் பொருள்களுக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாள்களில் மு.ப.9.30 - பி.ப.4.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் "அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்." என விலாசம் இடப்பட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடப் பொருள்கள் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம்" என குறிப்பிட்டு 2003.08.19 ஆம் திகதி அன்று பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கேள்விப் பெட்டியில் மாத்திரம் இடப்படல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/29474) (18-29)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
16 - 11 - 1917



மறைவு
24 - 07 - 2003

## திருமதி இரத்தினம்மா செல்லையா
**(காளிகோயிலடி, குப்பிழான்)**

எமது அன்னை அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் நாளை (14.08.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மஞ்சத்தடி இணுவிலில் உள்ள இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.* (211359) (32-18-29)

## கலாசார உத்தியோகத்தர் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள கலாசார உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி மாலை 230 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெற உள்ளதாகவும் அனைத்து கலாசார உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் அறிவித்துள்ளார். (ம-8)


SUBRA(14)
சித்தன்கேணி
A/L DAY CLASS
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்:15.08.2003
காலை 7.30 மணி
★எமது வழமையான ஆசிரியர் குழு.
★வாரத்தில் 18 மணி நேர வகுப்புகள்
★மாதாந்தம் பயிற்சிப் பரீட்சை.
★கடந்தகாலப் பெறுபேறே எமது திறமை.
(C-29452)(12-18-29)

N.C.A.
கல்வி நிறுவனம்
சாரையடி - பருத்தித்துறை.
DAY CLASS
A/L 2004
கலை,
வர்த்தகம்
வழமையான ஆசிரியர்கள்
ஆரம்பம்: 14.08.2003
(C29482)(12-18)

A/L 2004
பொருளியல்
by.P.மோகன்
Paper CLASS
ஆரம்பம் :-16.08.2003 சனிகாலை 7.30
(சனி, ஞாயிறு 7.30-8.30)
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.
(21344)


## தேவை

எமது பல்பொருள் விற்பனை நிலை யத்திற்கு ஒரு பெண் ஊழியர் தேவை.

நேரில்வரவும்
ராஜா குறோசறீஸ்
153, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

(C/29476) (12-18)


லஷ்சுமி சினிமா
இணுவில்
ரம்யாகிருஷ்ணன், லிவிங்ஸ்டன், மூர்த்தி ஆகியோர் நடித்த
அன்னை காளிகாம்பாள் றீல்ஸ்
சிறுவர்கள், பெரியோர்கள் குடும்பத்துடன் பார்க்கக் கூடிய படம். 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(21323)



நாகம்ஸ் சுன்னாகம்
ஒரே தடவையில் 27 திரையரங்குகளில் திரையிடப்பட்டு 10ஆவது வெற்றி வாரத்தை எட்டிய
நித்தியவாணி நடித்த
சின்ன தேவதை (தமிழ்) (றீல்ஸ்)
இரவு 7.00 மணிக்கு
CROUCHING CIGER HIDEEN DRAGON
(பெண்களின் கராட்டிச்சித்திரம்)
வியாழன் வரை.
(C29232) (12-18-29)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
அஜித், சிம்ரன் நடித்த
வாலி
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
BLUE STREAK
தினசரி 8.45 இற்கு.
(C29213) (12-18-29)

ராஜா யாழ்ப்பாணம்
16.08.2003 வரை
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
பிரியமான தோழி
மாதவன், ஜோதிகா நடித்த (றீல்ஸ்)
தினசரி: 10.30,2.30,6.30.
(C/29233) (12-18-29)

லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார். சிம்ரன். வையாபுரி. மணிவண்ணன்
அரசு (றீல்ஸ்)
தினசரி: 3.00. 7.00 (பு.நேரம்)
JUDGE AND JURY
காலை 11.00
(C/29373) (12-18-29)


# முக்கிய அறிவித்தல்

யாழ். பெரிய ஆஸ்பத்திரி புதிய உட்புகு வழிக்கு முன்னால் நடைபெற்று வந்த பல் கட்டுதல் சம்பந்தமான தொழிலை நான் முற்று முழுதாக நிறுத்தியுள்ளேன். அதேபட்சத்தில் எனது முகதாவில் யாரிடமும் பல்கட்டுதல் சம்பந்தமாக முற்பணம் செலுத்தி ஏமாற வேண்டாம். இதற்கு நான் உத்தரவாதம் இல்லை என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

T.குலசிங்கம்
(செயற்கைப் பல் கட்டுநர்)

(21358) (29-12-18)

# பிற்போடப்பட்டுள்ளது

எமது கழகத்தால் 'காலசுரபி' இதழ் - IV வெளியீட்டுக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திபோடப்பட்டு எதிர்வரும் 15.09.2003 திங்கட்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்படும். தொடர்ந்து சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

-வரலாற்றுக் கழகம்.

*யாழ்.பல்கலைக்கழகம்.* (21361) (32-12-18-29)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் மோகன்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட ரேடியோ மார்க்கோனி என்று அழைக்கப்படுகின்ற வேலாயுதம் மோகன் நேற்று(12.08.2003) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மோ.பத்ரா
(மனைவி).

*சிவன் வீதி,*
*ஆவரங்கால்.* (21364) (29-12-18)

## ஆறுமுகம் தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வரிமதிப்பாளர்,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் இசக்கி முத்துப் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் அவர்கள் 10.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதமெய்தினார்.

அன்னார் திலகவதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான க.சி.ஆறுமுகம் - சுந்தரம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான விதானையார் பொன்னம்பலம - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் லோகநாதன் (சுங்கஉதவி அத்தியட்சகர்), தேவராணி (கனடா), ஆறுமுகநாதன் (கனடா), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தகோமணி, தனபாக்கியம் (V.செல்வரத்தினம் அன் கம்பனி, கொழும்பு - 11), தங்கேஸ்வரி, தங்கரத்தினம், தம்பிஐயா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் நாகேந்திரசூரியர் (கனடா), விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்வியா (கனடா), கிரிசாந்தன் (கனடா), விதுஷா, மதுரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2003) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*32,இசக்கி முத்துப்பிளேஸ்,*
*பிக்கிளிங்ஸ் வீதி,*
*கொழும்பு-13*
*T.P. 337987* (C/29471) (26-12-18-29)

தகவல்:
த.லோகநாதன் (மகன்)

**103 ஆம் ஆகவையில் சிவனடி சேர்ந்த**

## சின்னத்தம்பி ஆறுமுகம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் 56 சப்பல் வீதியை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் 12.08.2003 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கொல லங்கலட்டி சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற அம்பலவாணா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் திருமதி திலகவதி, Dr.திருநாவுக்கரசு (அரசினர் மருந்தகமும், மகப்பேற்று மனையும், குருநகர்), புனிதவதி (இளைப்பாறிய புள்ளிவிவர ஆய்வாளர்), திருமதி மங்கையற்கரசி (இளைப்பாறிய ஆசிரியர், வசாவிளான் மத்திய கல்லூரி), திருமதி சொர்ணாம்பிகாதேவி, மாணிக்கவாசகர் (முன்னாள் ஸ்ரீலங்கா வான்படை, ஓமான் பாதுகாப்பு அமைச்சு (Modes ) உத்தியோகத்தர்), ஆனந்தநடராஜா (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நெல் சந்தைப்படுத்தும் பகுதி - வவுனியா), திருமதி ஞானேஸ்வரி (ஓய்வுபெற்ற பாடசாலை பற்சிகிச்சையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி (துறைமுக அதிகாரசபை) மற்றும் சிவபூசமலர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அருந்தவராசா, காலஞ்சென்ற இராசகோபால் (சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்), புவனேஸ்வரி (உப அதிபர் மல்லாகம் மகாவித்தியாலயம்), கமலா தேவி, நாகேந்திரன் (பொறியியலாளர் SMEC Consultant - வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை, வேலுப்பிள்ளை, முத்துப்பிள்ளை, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் சண்முகானந்தன் (கல்வி அமைச்சு மேல் மாகாணசபை), ஹேமலதா (ஆசிரியர், வூல்வென்டோல் மகளிர் கல்லூரி கொழும்பு), சிவகௌரி (எழுதுநர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), இந்திரஜித் (கிராமசேவையாளர், தெல்லிப் பழை கிழக்கு), தேவானந்தன், அருந்தவச்செல்வி, சிவாகரன் (சமுர்த்தி உத்தியோகத்தர்), கேதீஸ்வரன் (சேவாலங்கா - கிளிநொச்சி), கலைமகள், அறிவுச்செல்வன், பாலமுருகன், வாசுகி (4ஆம், 3ஆம், 1ஆம் வருட மருத்துவ பீட மாணவர்கள்), ஸ்ரீகாயத்திரி (வேம்படி மகளிர் கல்லூரி), ஞானகணேசன் (பரியோவான் கல்லூரி), கேதிசன், ஸ்ரீதர்சினி (எழுதுநர்-புனர்வாழ்வுப் பகுதி, யாழ். செயலகம்), கஜப்பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி), கணேச தாசன் (யா/மத்திய கல்லூரி), சர்மினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கஜந்தன், சஞ்சயன் (பரியோவான் கல்லூரி மாணவர்கள்), நர்மதா, ஜனனி (வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு பேரனும் சாரங்கன் (கொழும்பு இந்துக் கல்லூரி), வித்தியாசாகர், ஆரணி, நிலக்சிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2003) புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
டாக்டர். ஆ.திருநாவுக்கரசு
(மகன)

*56,சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P: 2226313* (C/29481) (29-12-18)

## கண்காணிப்புக் குழுவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியில் புலிகள் முகாம் அமைந்திருப்பது அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைய முறையானதா அல்லது முறையற்றதா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அதன் தலைவருக்குமே உரியது என நோர்வே அனுசரணையாளர்கள் கருதுகின்றனர் எனத் தெரிகின்றது.

"அந்த விடயத்தில் நாம் தலையிட விரும்பவில்லை, கண்காணிப்புக் குழுத்தலைவரின் தீர்ப்பு முடிவு சரியானதா அல்லது பிழையானதா என்பதை ஆராய்வதும் எமது எண்ணமல்ல. ஆனால், அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 3.2 பிரிவின் பிரகாரம் ஒப்பந்த விதிகளுக்குப் பொருள் விளக்கம் கொடுக்கும் இறுதியான அதிகாரம் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கே உரியது. அந்த அதிகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பை - இரு தரப்பில் எதுவாயினும் ஏற்காமல புறக்கணிக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. அதே இரு தரப்புக்கும் வலியுறுத்துவோம்" என்று நோர்வேத் தரப்பில் கூறப்பட்டிருப்பதாக அறியவந்தது.

எனவே, இன்று புலிகளின் தலைவர்களை எரிக் சொல்ஹெய்ம் சந்திக்கும் போது, குரங்குபாஞ்சான் பகுதியில் புலிகளின் முகாம் அமைந்திருப்பதில் உள்ள நியாயங்கள், எதிர் நியாயங்கள் குறித்து அதிகம் கலந்துரையாடப்படமாட்டாது எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பில் எரிக் சொல்ஹெய்முடன் எதுவும் பேசுவதில்லை என்று புலிகளும் தீர்மானித்திருக்கின்றனர் என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி சில செய்தி ஏஜென்சிகள் நேற்றுத் தெரிவித்தன.

"குரங்குபாஞ்சான் முகாம் விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை, அதனால் இவ்விவகாரம் குறித்து எரிக்சொல்ஹெய்முடன் எதுவும் பேசப்படமாட்டாது. இடைக்கால நிர்வாகம் குறித்தும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுப்பது குறித்துமே அவருடன் பேசப்படும்" - இவ்வாறு புலிகள் தரப்பிலிருந்து கருத்து வெளியாகியுள்ளதாக அந்த செய்தி ஏஜென்சிகள் மேலும் தெரிவித்தன.

எரிக் சொல்ஹெய்ம் நேற்றுக் காலை இலங்கை வந்து சேர்ந்தார். நேற்று அவர் அமைச்சர் பேராசிரியர் ஜீஎல்பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அவர் இன்று காலை கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச் செல்வார்.

இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் ஹென்ஸ் பிரட்ஸ்கரும் அவருடன் கிளிநொச்சி செல்வார்.

அவர்கள் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவர்.

(ஒ-9-12)

## குப்பைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் பல இடங்களிலும் கைவிடப்பட்ட வெடிபொருள்கள் இருக்கலாம் எனவும், துப்புரவுப் பணிகளில ஈடுபடுவோர் குப்பைகளை கொளுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் இராணுவத்தினர் அறிவுறுத்தினர்.

## மட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

மட்டக்களப்பில் வங்கி அலுவல்களோ, பாடசாலைகளோ, அரச அலுவலகங்களோ, போக்குவரத்துக்களோ பாதிக்கப்படவில்லை. காத்தான்குடியில் அனைத்துமே ஸ்தம்பிதமடைந்தன. வங்கிகள், கடைகள், பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துக்கள் நடைபெற்றன. பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். வீதிகளில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு மக்கள் கூடி நிற்பதைக் காண முடிந்தது.

காத்தான்குடியை அடுத்துள்ள ஆரையம்பதிப் பகுதிகளில் ஆரம்பித்து பெரிய நீலாவணை வரையுள்ள தமிழ்ப் பகுதிகளில் அலுவல்கள் வழமை போல் நடைபெற்றன. (ஒ-12)

## கிணற்றிலிருந்து துப்பாக்கிகள் மீட்பு

வவுனியா,ஓக.13

வவுனியா, ஓமந்தை, அரச முறிப்புக் கிராமத்தில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து நான்கு துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

அரச முறிப்புக் கிராமத்தில், நேற்று வீடொன்றிலுள்ள கிணற்றினை சுத்திகரித்த பொழுதே அதிலிருந்து துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் இரண்டு, எல்.எம்.ஜி.ரகத் துப்பாக்கிகள் இரண்டு என்பனவே மீட்கப்பட்டு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவையாகும். (ஒ-9-164)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்நகர வீதியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருட முயன்ற இளைஞனை, பொலீஸார் மடக்கிப் பிடித்தனர். இச்சம்பவம், நேற்று முன்னிரவு யாழ்.கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்றது. (ஒ-9)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட அரிசி - றப்பர் ஒப்பந்தத்துக்குப் பின்னர் புதிய ஒப்பந்தமொன்று செய்ய விருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இருநாடுகளுக்கும் இடையில் புதிய உறவுகளை வளர்க்கும் நோக்குடன் இந்த ஒப்பந்தத்தை செய்து கொள்வதென இரு பிரதமர்களும் இணங்கியுள்ளனர்.

## மண்மீட்க இளையவர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது மனித நேய உணர்வு கொண்டவர்கள் யாரும் அமைதியாக இருக்கமாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல. ஈழ மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற இயக்கம். இந்திய விடுதலைக்காகப் போராடிய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய இராணுவம் போன்று பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்கள் மண்ணை மீட்கப் போராடி வருகிறது.

எனவேதான், புலிகளுடன் பேச்சு நடத்துமாறு 51 இற்கும் மேற்பட்ட உலக நாடுகள் சிங்கள அரசை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்துள்ளன. இதன் மூலம் ஈழத்தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள்தான் என்று உலக நாடுகளே அங்கீகரித்துள்ளன.

மறைந்த பிரதமர் இந்திராகாந்தியின் அறிவுரையை ஏற்க சிங்கள அரசு மறுத்ததால் புலிகளுக்கும் பிற போராளிகளுக்கும் ஆயுதப் பயிற்சி அளித்து அவற்றுக்கு ஆயுதங்களை வழங்க இந்திரா அம்மையார் ஏற்பாடு செய்தார். ஆனால், பின்னர் காழ்ப்புணர்ச்சியுடனும் உள்நோக்கத்துடனும் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாகத தடை செய்யப்பட்டது.

வங்காள தேசமக்கள் தமது விடுதலைக்காகப் போராடியபோது இந்திய அரசியல் கட்சிகளும் மக்களும இந்திய இராணுவத்தை அனுப்பி உதவ வேண்டும் என வலியுறுத்தியதை பிரதமர் இந்திரா ஏற்று, வங்க நாட்டு மக்களின் விடுதலைக்கு உதவினார்.

அதைப்போல, ஈழத்தமிழர்களுக்கு தமிழக, இந்திய அரசுகள் உதவ வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமையைச் செய்ததற்காக எங்கள் மீது பொடா சட்டம் ஏவப்பட்டுள்ளது.

ஈழத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் வாழ வேண்டிய வயதில் தங்கள் மண்ணை மீட்கத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்யும் போது அவர்களுக்கு ஆதரவாக, இந்த வயதில் சிறை செல்லும் சிறு தியாகம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை குறித்துப் பெருமைப்படுகிறேன்.

- இவ்வாறு பழ.நெடுமாறன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார். வழக்கறிஞர்களின் துணைஇன்றி தனது வாதத்தை பழ.நெடுமாறன் மிக நிதானமாகவும் தெளிவாகவும் எடுத்துவைத்தார்.

இதையடுத்து, வழக்கை அடுத்த மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(ஒ)

## யாழ்ப்பாணத்தில் விடுதலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது? புலிகளின் அச்சுறுத்தலா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:-

புலிகள் எனக்கு எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டவில்லை. ஆனால், எந்த இயக்கத்தையும் சாராத தமிழ் மக்களே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர். எனினும், உங்களுக்கு இங்கு நல்லபெயர் உண்டு. அதைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. எனவே, யாழ். வருகையை ரத்துச் செய்யுங்கள் என்று பாதுகாப்புப் பிரிவினர் கேட்டுக் கொண்டனர்.

நான் பலமுறை புலிகளின் முக்கிய பிரமுகர்களுடனும் அரசியல் பொறுப்பாளர்களுடனும் நேரடியாகச் சந்தித்துப் பேசியுள்ளேன். தமது பிரதேசத்தில் காணியற்றவர்களுக்குக் காணி வழங்கும் வகையில் காணிக்கச்சேரிகளை நடத்தும் படியும், அதற்கு சகல பாதுகாப்பையும் தாம் வழங்குவதாகவும் புலிகள் என்னிடம் கூறினர்.

தமது மக்களுக்குக் காணிகளைப பெற்றுக்கொடுப்பதில் புலிகள் ஆர்வத்துடன் இருக்கின்றனர். கூடிய விரைவில் வடபகுதியிலும் காணிக்கச்சேரிகளை நடத்தி, காணியற்றவர்களுக்குக் காணிகளை வழங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.


LLION AIR
லயன் ஏயர்
தினமும் காலையும் மாலையும் பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,
GENERAL SALES AGENT
&
HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.
Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE : 0777 - 382343
0722 - 401423.
(C29348) (12-18-29)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L 2004 DAY CLASS
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:18.08..2003
(12-) (21366)

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி. யாழ்.நகர்.
A/L 2004
DAY CLASS
பிரிவு II
CHE.- திரு.அன்பழகன்
PHY.- திரு.சிவலிங்கம், திரு.பிரபா
BIO.- திரு.நாகநாதன்
Maths- திரு.குணசிங்கம், திரு.ராஜன்
ஆரம்பம்: 13.08.2003 8.30a.m.
★ பாட அலகுகளைப் பூர்த்திசெய்யாத மாணவர்களுக்கு விசேட ஒழுங்கு மேற்கொள்ளப்படும்.
(12-18-29) (C-29457)

யாழ்-நகரில் aat பரீட்சை
A/L பெறுபேறு கிடைத்துவிட்டது. அடுத்து உங்கள் தெரிவு நிச்சயமாக ஒரு "Professional Studies" ஆக இருக்கட்டும். பல்கலைக்கழக, ATI, வெளிவாரி மாணவர்களும் மிகக குறைந்த செலவில் aat பரீட்சையை எடுப்பதற்கு நாங்கள் வழி காட்டுகின்றோம்.
குறிப்பு: 15.08.2003 12 .00 மணிக்கு முன்பு உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Career.com Institute
No.79, Main St., Jaffna.
அலுவலக நேரம் - 10.00 a.m. - 2.00 p.m. (தினமும்)
(C29446) (12-18-29)


## மரண அறிவித்தல்கள்

### செல்வரத்தினம் விஜயலஷ்சுமி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் விஜயலஷ்சுமி நேற்று (12.08.2003) செவ்வாய்க கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் பாசமிகு மனைவியும் குமாரசாமி-செல்வநாயகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி மினாசித்தம்பி அவர்களின் பாசமிகு மருமகளும் வாசன், விஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற விக்னராசா மற்றும் விஜயசுந்தரம், விஜயராணி, விஜயரட்ணம், விஜயதேவி, விஜயாம்பாள், விஜயேந்திரன், பரிமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.விஜயேந்திரன் (சகோதரன்)
(Pan Pharmacy)

*மாதர்சங்க லேன்,*
*சித்தன்கேணி.* (21399)(12-18-29)

### செல்லப்பா நடேசு

தாவடியைப் பிறப்பிடமாகவும் காளிகோவிலடி, வட்டு.தெற்கு, வட்டுககோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நடேசு அவர்கள் நேற்று (12.08.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தாவடியைச் சேர்ந்த செல்லப்பா - மீனாட்சி தம்பதிகளின் அருமைப் புதல்வனும் வட்டுக்கோட்டை இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் புஷ்பதேவி, ரகுநாதன், ஜெகநாதன், கிரிஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் பக்தவத்சலம், கல்யாணி, லோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும் வேணுஜன், விருஷிகா, லக்ஷீதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மன்னவி, பிள்ளைகள்
மருமக்கள்.

*வட்டு.தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (21368) (29-12-18)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.